# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 07 அதிர்வு 80 மாசி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162













ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au



# தமிழ் அரசியல்வாதிகளை நம்பினோம் கைவிடப்பட்டோம்!

## சாந்தனின் சகோதரர் மதிசுதாவின் உருக்கமான பேட்டி



**ராஜீவ் காந்தி கொலைவழக்கில் 32 வருட சிறைத்தண்டனையின் பின்னர் சாந்தன் உள்ளிட்ட ஏழுபேரும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்களில் இலங்கைச் சேர்ந்தவர்கள் தாயகம் திரும்பமுடியவில்லை. சிறப்புக் காவலிலேயே தற்போதும் வைக்கப்பட்டுள்ளனர் சிறைச்சாலையை விடவும் மிகமோசமான நிலையில் அடைக்கப்பட்டுள்ள சாந்தன் பல்வேறு நோய்களால் அவதிப்பட்டுவரும் நிலையில், அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பலதரப்புக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் சாந்தனின் சகோதரரும், ஈழசினிமா இயக்குநருமான மதிசுதா தனது சகோதரனை மீட்பதற்காக தங்கள் குடும்பம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடத்திவரும் போராட்டத்தை எதிரொலி வாசகர்களுடன் இந்த நேர்காணல் ஊடாகப் பகிர்ந்து கொள்கிறார்.**

**நேர்கண்டவர் : ஜெரா**

**எதிரொலி: சாந்தன் அண்ணா கடந்த 32 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்தமைக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு என்ன?**

*பதில்: சாந்தன் அண்ணா கடந்த 32 வருடங்களாக சிறைத்தண்டைக்குள்ளாக்கப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு, 1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புபட்டவர் என்ற பெயரிலேயே கைது செய்யப்படுகின்றார். அத்துடன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் பத்மநாபாகொலையின் சூத்திரதாரி என்ற விடயமும் உள்வாங்கப்பட்டிருந்தது. இரண்டு வழக்குகளும் இடம்பெற்றுவந்தன. ஆயினும் 1998 ஆம் ஆண்டுதான் இந்தக் குற்றங்களில் தொடர்புபட்ட அனைவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு, அதில் 07 பேரைத் தவிர்த்து ஏனையோருக்கு விடுதலையளிக்கப்பட்டது.அந்த ஏழு பேரிலும் நான்கு பேருக்குத் தூக்குத்தண்டனையும், ஏனைய மூவருக்கும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. பின்னர் நளினி அக்காவுக்கு தூக்குத்தண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது. ஏனைய மூவருக்கும் தூக்குத்தண்டனை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சாந்தன் அண்ணாவிற்குப் பத்மநாபா கொலைக்குற்றத் தொடர்பிற்காக 09 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.அதற்கான தண்டனைக்காலம் நிறைவடைந்த பின்னர், 2011 ஆம் ஆண்டு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அது ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது. இப்படியாக 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி உச்சநீதிமன்றம் விடுதலைசெய்தது. அதன்பிறகு அவர் திருச்சி சிறப்பு அகதிமுகாமுக்கு மாற்றப்பட்டு அங்கு கடந்த 15 மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.*

**எதிரொலி: சிறை விடுவிப்பின் பின்னர் அவரை ஏன் நாட்டுக்கு அழைத்துவர முடியவில்லை?**

*பதில்: நாங்கள் இலங்கையின் சாதாரண குடிமக்கள். சட்டத்துறை சார்ந்தவர்கள், அரசியல்வாதிகள் ஆகிய தரப்பினருக்கு சாந்தன் அண்ணனை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கக்கோரி கடிதங்கள் கொடுக்க மட்டுமே எங்களால் இயலும். நாங்கள் பெருமளவில் எங்களின் தமிழ் அரசியல் தரப்புக்களைப் நம்பினோம். எல்லோருக்குமே கடிதங்கள் கொடுத்திருக்கிறோம். சிலர் இது விடயத்தில் தம்மிடம் ஏற்கனவே தொடர்புகொள்ளவில்லை எனச் சொன்னார்கள். சட்டரீதியாகவும் சில நடவடிக்கைகளை எடுக்கமுயற்சித்தோம்.*

*அதற்காக தொடர்புகொண்ட சட்டத்தரணி சரியான பதிலளிக்காமல் தவிர்த்துவிட்டார். இந்தப் பதினைந்து மாதங்களாக எம்மால் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு சட்டரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் போராடியிருக்கின்றோம். இந்தப் பிரச்சினையை மக்கள் பிரச்சினையாக மாற்றியிருக்கலாம் என இப்போதுதான் சிந்திக்கிறேன். தமிழ் அரசியல் தலைமைகளை நம்பாமல் மக்களை நம்பியிருக்கலாம்.*

**எதிரொலி: திருச்சி சிறப்பு அகதிகள் முகாமில் அவர் எப்படி இருந்தார்?**

*பதில்: 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சி சிறப்பு அகதிகள் முகாமுக்கு சாந்தன் அண்ணாவைச் சந்திக்கச் சென்றேன். அது அகதிகள் முகாம் எனச் சொல்லப்பட்ட போதும் பழைய சிறைச்சாலையே அது.*

**(05ஆம் பக்கம் பார்க்க)**



# தமிழ் அரசியல்வாதிகளை நம்பினோம் கைவிடப்பட்டோம்!


21 வயதில் (1991)


32 வயதில் (2002)


54 வயதில் (2003)

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குள்ளும் அண்ணா தடுத்துவைக்கப்பட்டிருப்பது தனி வளாகம். நான் சென்றிருந்தபோது அதற்குள் 189 பேர் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அண்ணா உள்ளிட்ட நான்கு பேரையும் அந்த வளாகத்தினுள் சேர்க்கவில்லை. சிறைக்கூண்டுக்குள்ளேயே நால்வரும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். வலது புறமாக இருந்த சிறைக்கூண்டுக்குள் பயஸ் அண்ணாவும், ஜெயக்குமார் அண்ணாவும் இருந்தனர். இடது புறமாக இருந்த கூண்டுக்குள் இருந்த சிறியதொரு தனி அமைப்பிடத்தில் சாந்தன் அண்ணாவும், முருகன் அண்ணாவும் அடைத்துவைக்கப்பட்டிருந்தனர். இவர்களைக் காண்காணிக்க 18 பொலிஸார் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கூண்டின் ஒருபக்க ஜன்னல் தகரத்தால் இணைக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது. அதற்குள்ளால் வெளியில் எதனையும் பார்க்க முடியாது. காற்றும் உள்நுழையாது. மிகவும் ஒடுக்கப்பட்ட அந்த இடத்திற்குள் கடந்த 15 மாதங்களாக அவர்கள் நடக்கமுடியாத மனிதர்களாகவே தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். உலகில் வேறெங்கும் சிறைகள் கூட இப்படியில்லை. சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் காலை 06 மணியிலிருந்து மாலை 06 மணி வரை வெளியில் உலாவலாம். இவர்களை அந்த அறையைவிட்டு வெளியில் வரக்கூட அனுமதிக்கவில்லை. எனவே காலாற நடக்கக்கூட முடியாது. சமைப்பது தொடக்கம், உணவு உண்பது, துணிகளை வைப்பது, நாளாந்தக் கடமைகளைச் செய்வது என அனைத்துமே அந்த அறைக்குள்தான் என்கிற நிலை இருந்தது.

**எதிரொலி: அங்கிருக்கும்போது என்னென்ன உபாதைகளால் பாதிக்கப்பட்டார்?**

பதில்: அவருக்கு இருக்கின்ற மிக முக்கியமான உபாதை மனஉளைச்சல். ஒரு தண்டனைக் கைதியாகவோ அல்லது ஒரு தூக்குத்தண்டனைக் கைதியாகவோ வாழும்போது, என் காலம் இத்துடன் முடிந்துவிடும் என்கிற எண்ணத்தில் வாழ்ந்துவிடலாம். ஆனால் விடுதலை செய்கிறோம் எனச் சொல்லிவிட்டு, தொடர்ந்தும் சிறைவாழ்க்கையைக் கொடுப்பது மிகவும் கொடுமையான தண்டனை. சாந்தன் அண்ணாவும், முருகன் அண்ணாவும் தீவிர ஆன்மீகப் பற்றுக் கொண்டவர்கள். தியானம், யோகாசனம் போன்றவற்றில் அதிகம் ஈடுபடுவார்கள். எனவே இவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்படவில்லை எனச் சொல்லப்படுகிறது. ஆனால் சிறையில் இருக்கும் ஒருவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் செய்யப்படவில்லை. இப்போது சாந்தன் அண்ணா ஈரல் அழற்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. சரியான மருத்துவ அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

**எதிரொலி: இப்போது அவரின் உடல்நிலை எப்படி உள்ளது?**

பதில்: திருச்சி சிறப்பு முகாமிலிருந்து கடந்த மாதம் 25 ஆம் திகதி திருச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தகவலை சட்டத்தரணி ஊடாகவே அறிந்துகொண்டோம். அவர்கூட மனிதாபிமான அடிப்படையிலேயே தகவல் சொன்னார். தமிழக ஊடகங்கள் எதுவும் இதனை அறிக்கையிடவில்லை. தமிழக அரசு இந்த விடயத்தை மேம்போக்காகக் கடந்துபோய்விட்டது. ஆனால் இது தமிழக அரசு பதில்சொல்ல வேண்டிய விடயம். அவரின் தற்போதைய உடல்நிலை குறித்து அரசு சார்பில் எங்கேயும் ஒரு கருத்துக்கூட வெளியிடப்படவில்லை. இந்தக் மௌனக்காப்பு ஆபத்தானதாக மாறிவருகின்றது. அவரைப் பார்க்க சென்ற சட்டத்தரணிக்குக்கூட உடல்நிலை குறித்து எதுவும் கூறவில்லை.

**எதிரொலி: சாந்தன் அண்ணனின் வரவுக்காக மிக நீண்ட காலமாக போராடிவரும் உங்கள் தாயாரின் நிலை இப்போது எத்தகையதாக உள்ளது?**

பதில்: இந்தக் கேள்விக்கான பதிலானது எனது அம்மாவுக்கு மட்டுமானதாக இருக்காது. இந்த மண்ணில், மண்ணை நேசிக்கிற ஒவ்வொரு பிள்ளையையும் பெற்ற அம்மாக்களின் பிரதிநிதிகளில் எனது அம்மாவும் ஒருவர். எனது அம்மாவின் வாழ்க்கையைத்தான், இந்த மண்ணில் மண்ணை நேசிக்கும் ஒவ்வொரு பிள்ளையின் தாய்மாரும் வாழுகின்றனர். ஆயுதப் போராட்டம் குறித்த எனது பார்வைக்கும், எனது அம்மாவின் போராட்டத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. அந்த வேதனையை நேரில் பார்த்து அனுபவித்து வாழ்கிறேன். அண்ணா கைதுசெய்யப்படும்போது எனக்கு ஆறு வயது. அண்ணா கைதுசெய்யப்பட்டதிலிருந்து அம்மா எப்போதும் அசைவ உணவுகளை உண்பதில்லை. தொடர்ச்சியாக விரதம் இருந்து வருகின்றார். கடந்த 33 வருடங்களாக நாங்கள் உண்ணும் எந்த நல்ல சாப்பாடுகளையும் அவர் உண்டிருக்க மாட்டார். நாங்கள் கேட்டால், சிறையில் என் மகன் சாப்பிடுவதையே நானும் சாப்பிடுவேன் எனச் சொல்வார். நாங்கள் கட்டாயப்படுத்தினால் அழத்தொடங்கிவிடுவார். காலையில் கோயில் சென்றுவந்த பிறகே தேநீர்கூட அருந்துவார். எல்லோருக்கும் காலையில் நித்திரையால் எழும்போது, அலார்ம் ஒலி அல்லது கோயில் மணி ஒலிதான் கேட்கும். ஆனால் எனக்கு கடந்த 33 வருடங்களாக அம்மா காலையில் சத்தமாக அழுது குழறி சாமி கும்பிடும் சத்தம்தான் அலார்ம். ஒவ்வொருநாளும் அம்மாவின் கண்ணீரில்தான் நான் விழிக்கிறேன். அண்ணாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தண்டனை எங்கள் மொத்தக் குடும்பத்திற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அற்புதம்மாவுடன் எனது அம்மாவை ஒப்பிடமுடியாது. அவர் அரசியல் அறிவுள்ள ஒருவர். நன்கு உலகறிந்தவர். எங்களின் அம்மாவுக்கு கோயிலையும், எமக்கான சமையலையும் தாண்டி எதுவும் தெரியாது. 1989 ஆம் ஆண்டுக்கு முன்பு வடமராட்சியில் இருந்த போராளிகளில் பெரும்பாலானவர்கள் தங்கிப் போன வீடுகளில் எங்களின் வீடும் ஒன்று. எல்லாப் போராளிகளுக்கும் சமைத்துக்கொடுத்த பெருமையை மட்டுமே அம்மா கொண்டிருக்கிறார். டேவிற் அண்ணாவின் இழப்பிற்குப் பிறகே அம்மா அசைவம் சாப்பிடுவதை நிறுத்தினார். அப்பா தாடி வளர்க்கத் தொடங்கினார். எங்கள் குடும்பத்தின் சொந்த உறுப்பினர் போல இருந்த போராளி டேவிற் அண்ணாவின் இழப்பு எங்கள் எல்லோரையும் பாதித்தது. எனது அம்மா இப்படியொரு வாழ்க்கைச் சூழலுக்குள் வாழ்ந்தவர். எனவே நான் ஏற்கனவே சொன்னதுபோல இந்த மண்ணை நேசித்த பிள்ளைகளைப் பெற்ற அம்மாக்களின் ஒரு பிரதிநிதிதான் எனது அம்மாவும். அம்மாவுக்கு கண்சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என மருத்துவர்கள் சொன்னார்கள். இதுவரை காலமும் அதற்கு மறுப்புத் தெரிவித்தே வந்தார். தற்போது தன் பிள்ளையைப் பார்ப்பதற்காக ஒரு கண்ணில் சத்திரசிகிச்சை செய்துள்ளார். தற்போது கேட்கும் திறன் அரைவாசிக்கும் மேல் குறைந்துவிட்டது. ஆனால் அவரின் மன ஓர்மம் எத்தனை பேருக்கு இருக்கும் எனத் தெரியவில்லை. கோயிலுக்கு நடந்தே செல்வார். செருப்பு அணியமாட்டார். இப்படியாகக் கடந்த 33 வருடங்களாக அவர் போராட்டம்மிகு தவவாழ்க்கையையே வாழ்கிறார்.

**எதிரொலி: அண்ணனின் சிறை வாழ்க்கை உங்களின் சினிமாப் பயணத்தை எந்தெந்த வழிகளில் பாதித்தது?**

பதில்: இப்போதும்கூட நான் சாந்தன் அண்ணாவின் சகோதரன் என்பது பலபேருக்குத் தெரியாது. நேற்றும்கூட ஊடகமொன்றிலிருந்து அழைத்த நண்பர், சாந்தன் அண்ணாவின் குடும்பத்தினரைப் பற்றி அதிக பதிவுகளை இடுகிறீர்கள். அவரின் குடும்பத்தினரிடம் நேர்காணல் ஒன்றை எடுத்துத் தர முடியுமா எனக் கேட்டனர். இப்படியாக அண்ணாவை மறைத்தே நான் வாழ்ந்தேன். நான் அண்ணாவை எனது கலைப்பயணத்திற்குப் பயன்படுத்தவும் விரும்பவில்லை. சினிமா என்பது எனது அடையாளத்திற்கான போராட்டம். அதில் எனது உழைப்புத்தான் இருக்க வேண்டும் என நம்புகிறேன். அண்ணாவின் பெயரைவைத்துக்கொண்டு சாதித்தேன் என்ற விமர்சனம் வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன். சாந்தன் அண்ணாவை நன்கு அறிந்த சீமான் அண்ணன், வெற்றிமாறன் அண்ணன், அமீர் அண்ணன் ஆகியோருக்கு என்னை சினிமா இயக்குநராகத் தெரியும். ஆனால் சீமான் அண்ணனைத்தவிர வேறு யாருக்குமே நான் சாந்தனின் தம்பி என்பது தெரியாது. இதை நான் மறைத்தே வாழ்கிறேன். எனது சினிமா வாழ்க்கைக்கு அதனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆனாலும் சாந்தனின் தம்பியாக இயங்கும்போது அது என் சுதந்திரத்தை சில இடங்களில் பாதித்துள்ளது. போராட்ட வாழ்வியலை நான் காட்டிய வெந்து தணிந்தது காடு திரைப்படமானது, பலரை சென்று சேர்ந்தது. போருக்குள் வாழ்ந்த பலர் அதனைக் கொண்டாடினார்கள். அதனைத் தவறான கண்ணோட்டத்தில் பார்த்த சிலர், மதிசுதா அண்ணாவை மீட்கும்நோக்குடன் இந்தியாவை சந்தோசப்படுத்த தன் படத்தில் சில காட்சிகளை வைத்துள்ளார் எனக் கூறினர். அதேபோல இலங்கை அரசை படத்தில் குற்றம்சாட்டாமைக்கும் அண்ணாவை இங்கு அழைத்துவருவதற்காகவே என்றும் கூறினர். இத்தனைக்கும் அண்ணாவுக்கும் எனது இந்தப் படத்திற்கும் எந்த தொடர்புமில்லை. என்னை விமர்சிக்கவேண்டும் என்பதற்காக அண்ணாவையும் இதற்குள் இழுத்துவந்தனர்.

**எதிரொலி: அண்ணனின் சிறையிருப்பு உங்களின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியது?**

பதில்: எங்கள் குடும்பத்தை அனைத்து வகையிலும் பாதித்தது. எனது அக்காவின் பிள்ளைகள் மீது அண்ணாவின் நிழல் விழாதமாதிரி பார்த்துக்கொண்டோம். அப்பாவின் மரணத்திற்குப் பலர் நேரில் வரவில்லை. மரணவீட்டுக்கு வந்தால் தங்களைப் பின்தொடர்வார்கள் எனத் தகவல் சொன்னார்கள். மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை மாற்றிவிட்டு வந்த ஒரு சிலர்கூட இருந்தனர். பலர் எங்களின் வீட்டுக்கு வரவோ எங்களுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ளவோ தயங்கினர். இப்படி பல விடயங்களை நாங்கள் எதிர்கொண்டிருக்கின்றோம்.

**எதிரொலி: சாந்தன் அண்ணாவை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தற்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?**

பதில்: அண்ணாவை நாட்டுக்கு அழைத்து வருவதற்காகப் பலரையும் நாடியிருக்கின்றேன். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அனைவரிடமும் போனோம். சிலர் எங்களின் வீட்டுக்கு வந்தும் ஆறுதல் சொன்னார்கள். தங்களால் இயன்ற நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். அவை எதுவும் நடக்கவில்லை. எனவே அதற்கு அடுத்த கட்டமாகவும், இறுதிக்கட்டமாகவும் செய்யவேண்டியதைப் பலரின் ஆலோசனைக்கு அமைவாக செய்துவருகின்றோம். இந்த நிலைப்பாடு தொடர்பில் கடந்த 15 மாதங்களாகத் தயக்கமிருந்தது. எங்கள் குடும்பத்தில் முடிவெடுக்க வேண்டிய இடத்தில் இருப்பது நான்தான். இந்த முடிவை நான் முன்பே எடுத்திருப்பின் இவ்வேளைக்கு அண்ணா எமது குடும்பத்தாருடன் இணைக்கப்பட்டிருப்பார்.

**எதிரொலி: அதில் ஒரு கட்டமாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தாங்கள் சந்தித்தமை தமிழ்த் தேசியத் தரப்பினால் விமர்சிக்கப்படுகிறது. அதுகுறித்து என்ன கருதுகிறீர்கள்?**

பதில்: அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஜனவரி மாதம் 30 ஆம் திகதியே சந்தித்தோம். அம்மாதான் அவருடன் பேசினார். நிச்சயம் உங்களின் மகனை அழைத்து வருவதற்கு உதவுவேன் என அவர் உறுதியளித்தார். இந்த முடிவெடுப்பில் பல தயக்கங்கள் இருந்தன. இது குறித்து கடந்த காலத்தில் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட பல முக்கியஸ்தர்களிடமும் ஆலோசனை பெற்றபின்பே இந்தச் சந்திப்பை மேற்கொண்டோம். இதனைவிட வேறு வழியிருப்பதாகவும் தெரியவில்லை. விமர்சிப்பவர்கள் எங்கள் குடும்பநிலை குறித்து சற்றுயோசிக்கவேண்டும்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 79 மாசி 2024 தொ.பே:1800 960 162

# எப்படியிருந்தோம் இப்படியாகி விட்டோமா?

எப்படியிருந்த யாழ்ப்பாணம் இப்படியாகிவிட்டதே. பாடகர் ஹரிகரன் குழுவினரின் யாழ்ப்பாண இசைநிகழ்வு இத்தகைய உள்ளக் கிளர்த்தல்களைப் பலரிடம் எழுப்பிவிட்டது. யாழ்ப் பாணத்தவர்கள் பொதுவாகவே கலையை ஆராதிப்பவர்கள் தான். கலைஞர்களை மதிப்பவர்கள் தான். ஆனால் சினிமாக் கூத்தாடிகளுக்குப் பின்னால் இப்படி நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு எந்தக் காலத்திலும் அலைந்தவர்கள் அல்லர்.

இப்போது 'முற்றவெளியில் முதன்முறையாக' என்ற அறி விப்புடன், ஏதோ கலையுணர்வே அற்ற ஜென்மங்களுக்காக, மனமிரங்கி வந்திருப்பதாகவே ஹரிகரன் இசைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தவர் தெரிவித்திருந்தார். இத்தனைக்கும் அவரும் ஒரு ஈழத்தவர். புலம்பெயர் பணக்காரர்களில் ஒருவர். அவருக்கு வேண்டுமானால் சினிமாக் கூத்தாடிகள் வானத்தில் இருந்து வந்தவர்கள் போல தெரியலாம். அவரது மனைவி ரம்பா போன்ற நடிகைகள் தான் உலகில் உன்னதமானவர்கள் என்று அவர் நினைக்கலாம். ஆனால் அதற்காக ஈழத்தமிழர்களை அவர் கிள்ளுக்கீரையாக நினைப்பது அவரது அறிவிலித்தனத்தையே காட்டும்.

1990 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி. இதே யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எள் போட்டால் கூட விழ இடமில் லாத சனக்கூட்டம். வந்தது வயோதிபத்தின் ஆரம்பத்தில் இருந்த தேனிசை செல்லப்பா. அவர் பாலுணர்வைத் தூண்டும் குத்துப் பாடல்களைப் பாடியவரல்லர், தனக்கு கூட்டம் சேர்க்க தமன்னா போன்ற கவர்ச்சி நடிகைகள் புடைசூழவும் வந்தவரல்லர். ஆனா லும் அவரைக் காண, அவர் பாடலைக் கேட்க தாயகத்தின் பல பாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். தேனிசை செல்லப்பா தமிழர்களின் விடுதலையை நேசித்த ஒரு பிறவிப்பாடகன். புலிகளைப் பாடிய வாயால் அரசியல்வாதிகளையோ, சினிமாத்தனமான குப்பைகளையோ பாடமாட்டேன் என்று சத்தியம் செய்த நித்தியக்கலைஞர். எனவே நெருப்பாறாக அவர் வாயில் இருந்து வந்த இசையில் நரம்புகள் முறுக்கேறி, விடுதலையுணர்வு முற்றவெளியை அன்றைக்கு நிறைத்திருந்தது.

அதேமுற்றவெளியில் தான் இப்போது ஹரிகரன் குழுவின ரின் இசைக்கேளிக்கை நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இளையோ ரின் பாலுர்வுணவைத் தூண்டி, அவர்களை தென்னிந்தியச் சினிமா மோகத்துக்குள் வீழ்த்தி, கேளிக்கைப் பாதைக்குள் பயணிக்க வைப்பதே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களின் நோக்கம். ' ஈழத்தமிழர்கள் எப்போதும் அழுது கொண்டிருக்க வேண்டுமா? ஆறுதலுக்கு இப்படியான நிகழ்ச்சிகள் வேண் டாமா?' என்று ஒருசாரார் கம்புசுற்றக்கூடும். ஆனால் 'ஈழத்தமிழர் கள் எப்போது அழுதுகொண்டிருந்தார்கள்?'என்று திருப்பிக் கேட்பதே பொருத்தமானது. போர் ஒருபக்கம் தேசத்தில் தீயாகத் தகித்தபோதும், மறுபுறம் மக்களை கலை, இலக்கிய செயற் பாடுகளால் எப்போதும் துவளவிடாமல் புத்துணர்ச்சியூட்டும் பணி ஓய்ந்ததே இல்லை. அதனால்தான் கலைபண்பாட்டுக்கழகம் என்ற தனிப்பிரிவையே உருவாக்கி, மக்களின் மனதை ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சிகள் முடிவில்லாமல் நடந்தன. முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை ஒருபுறம் போரும், மறுபுறம் கலையுமாக வாழ்ந்தவர்கள் தான் ஈழத்தமிழர்கள். ஆனா லென்ன, எமது பண்பாடும் , கலையும் வேறுவிதமானவை. மலினமான உணர்வுகளை மையமாகக் கொண்டவையல்ல. மாறாக மக்களை ஆற்றுப்படுத்துவதோடு, மானுட விடுதலைக் கான ஆயுதங்களாகவும் விளங்கின. எமது மரபை, தொன் மையை, இருப்பை அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்தும் கருவிகளாகவும் கலைகளை நாம் கைக்கொண்டிருந்தோம். அப்போது எந்தக் ஹரிகரனோ, தமன்னாவோ, யோகி பாபுவோ இங்கு வரவில்லை. எங்களுக்காக எங்கள் கலைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் எம் ஆன்மாவை ஆறுதல்படுத்தினார்கள். பதிலுக்கு நாமும் அவர்களைக் கொண்டாடி மகிழ்ந்தோம். இப்போது நடப்பதென்ன..? எங்கள் வக்கிர உணர்வுக்கு தீனிபோடும் வகையில் களியாட்டங் கள் நடத்தி, இதுவே நாம் பிறப்பெடுத்த நோக்கம் என்பதாக நம்பவைக்கப்படுகிறோம். இந்தக் களியாட்ட நிழலில் நம் போராட்டத்தின் வீரவரலாறு புதைக்கப்படுகிறது. எம் பண்பாடு சிதைக்கப்படுகிறது. இத்தகைய விஷச்செடிகள் வளர்வது ஈழத்தமிழினத்தின் தனித்துவத்துக்கும், உரிமைக்கான போராட்டத்துக்கும் எப்போதும் ஆபத்தே. இனியேனும் கொஞ்சம் விழிப்படைவோம். இரவல் சேலையில் கொய்யகம் போடாமல், நமக்கான நம் கலைஞர்களை அவர்களின் கலைகளைக் கொண்டாடுவோம். நாமும் நமக்கோர்நலியாக் கலையுடை யோம்.



# நகையாகும் யானைப்பல் காண்பான் புகல் விஜய் அரசியல் பிரவேசம்

மானமும் நாணும் அறியார் மதிமயங்கி
ஞானம் அறிவார் இடைப்புக்குத் – தாமிருந்து
ஞானம் வினாஅய் உரைத்தல், நகையாகும்
யானைப்பல் காண்பான் புகல். – பழமொழி நானூறு

(தகுந்த நூல்களைக் கல்லாமல் அல்லது குறிப்பிட்ட துறையில் செயலாற்றுவதால் வரும் அனு பவத்தினால் கிடைக்கும் பட்டறிவு இல்லாதவர்கள், பல நூல்களையும் கற்ற அறிவுடையோர் மற்றும் துறையில் சிறந்த விற்பன்னர்கள் உள்ள சபையில் நடுவிற் புகுந்து அவர்களுக்கு இணையாகத் தாமும் இருந்து செயலாற்றுவேன் என்று சொல்வது யானையைப் பல் பிடித்துப் பார்க்கப் புகுதல் போல் யாவர்க்கும் நகை தரும் செயலாகும்)

*தொடர்ச்சியாக நடிகர் விஜய் அவர்களின் செயல்பாடுகளையும்,***(07ஆம் பக்கம்பார்க்க)**



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

# போலிகளின் முகத்திரை கிழியுமா?

*அன்புள்ள ஆசிரியருக்கு,*

*'ஈழப்பிரச்சினை பற்றி புலம்பெயர் உறவுகளின் குரல்களின் பிரதிபலிப்பு சர்வதேச அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது' என்ற எதிரொலியின் ஆசிரியத் தலையங்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் ஒரு சில அமைப்புக்களைத் தவிர மற்ற அமைப்புகள் ஈழத்தமிழ் மக்கள் பிரச்சினையில் ஆன்மசுத்தியுடன் செயற்பட்டுக் கொண் டிருக்கின்றனவா என்பதே தொக்கி நிற்கும் கேள்வி.*

*தங்கள் இருப்பை, சமூக அங்கீகா ரத்தைத் தக்க வைத்துக் கொள்ள எமது ஈழப்பிரச்சினையை ஒரு கருவியாக தங்கள் சுயநலத்திற்காகவே அவர்கள் பாவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.*

*இதையே தமிழ்ச்சங்க கூட்ட நிர் வாகிகளின் கடந்த கால அடாவடித்தனம் பிரதிபலித்து நிற்கிறது.*

*இப்படியான அமைப்புக்கள் ஈழத் தமிழ் மக்களின், குறிப்பாக கடந்த 10 வருடத்திற்கு மேலாக அகதி அந்தஸ்து கோரி விரக்தியின் விளிம்பில் உழன்று கொண்டிருக்கும் அகதிகள் விடயத்தில் அவர்களின் அவலங்கள் குறித்து எப் படியான அழுத்தங்களை அவுஸ்திரேலியா அரசுக்கு கொடுத்தார்கள்...?*


*எமது பிரச்சினையை வைத்து சதுரங்க விளையாட்டு விளையாடி காய்களை நகர்த்தி சுயலாபங்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் இவை போன்ற அமைப்புகளின் கீழ்த்தர நடவடிக்கைகளை இனியும் அநுமதிக்க முடியாது. இனியும் இவர்களின் போலி முத்திரையை கிழித்தெறிய வேண்டி அணிதிரள்வதே எமக்குள்ள பெரும் கடமையாகும்.*

**மணிமைந்தன்.**
**மெல்போர்ன்.**

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# நகையாகும் யானைப்பல் காண்பான் புகல்
# விஜய் அரசியல் பிரவேசம்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரைப்படங்களையும் உற்று நோக்குபவர்களுக்கு அவர் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாணியை பின்பற்றி வருகிறார் என்பது நன்கு தெரிந்திருக்கும். கத்தி, மெர்சல், சர்க்கார் மற்றும் பல சமீபத்திய படங்களில் அரசியல் வசனங்கள் பேசுவது மற்றும் சமகால அரசியல் பிரச்சினைகளை நேரடியாக கவோ / அல்லது மறைமுகமாகவோ விமர்சிப்பது போன்ற காட்சிகளை வைப்பது . எம்.ஜி.ஆரைப் போலவே அரசியலைத் தூண்டும் பாடல்களை தமது படங்களில் வைப்பது போன்ற பல யுக்திகள். நாம் ஒரு விஷயத்தை கவனிக்கக் வேண்டும். நமது நாட்டின் மாபெரும் சிக்கல் என்பது சினிமா நடிகர்கள் எதைப் பற்றியும் தாராளமாக துறை விற்பன்னர்கள் போன்று கருத்துத் தெரிவிக்கலாம்.விஜய் அவர்களும் விதிவிலக்கன்று.ஊடகங்களும் தங்களது விளம்பரத்திற்காக இந்தச் செய்திகளை மக்களுக்கு உடனே தெரியப்படுத்துவதில் கில்லாடிகள்.

பணமதிப்பு நீக்கம் , ஜல்லிக்கட்டு , காவிரிப் பிரச்சினை, இலங்கைப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளுக்கு விஜய் தனது கருத்தை சொன்னார். மேலும், தொகுதி வாரியாக அதிக புள்ளிகள் எடுத்த மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்குவது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் போன்ற பல நலத்திட்டங்களை ஊடக வெளிச்சம் கிடைக்க வேண்டுமென்று செய்தார் . நாம் இங்கு கவனிக்க வேண்டியது இதைப் போன்ற நல்ல காரியங்களைப் பலர் யாரும் அறியாமல் (குறிப்பாக ஊடகம் விளம்பரமன்றி ) செய்துகொண்டேயிருக்கின்றனர் . எம்.ஜி.ஆரைப் போலவே சினிமாவிலிருந்து அரசியலுக்கு நுழைய இந்த யுக்திகளை இதற்கு முன்னர் கடைபிடித்தவர்கள் ரஜினிகாந்த் மற்றும் மறைந்த விஜயகாந்த். அவர்களிலிருந்து விஜய் எவ்வாறு வேறுபடப் போகிறார் மற்றும் அவரது அரசியல் எப்படி இருக்கும் என்பதைக் காலம் தான் முடிவு செய்யும்.

கடந்த பல வருடங்களுக்கு முன்பு நடிகர் விஜய் அவர்கள் அரசியல் வருகை தொடர்பான கேள்விக்கு, தன்னை இந்த இடத்தில் அமர்த்திய மக்களுக்கு நிச்சயம் எதாவது செய்ய வேண்டும் என்றும் அதற்கான காலம் சரியாக வரும் என்று கூறினார். தொடர்ச்சியான தமிழகத்தில் மக்களிடம் பரவலாக நிலவும் திமுக / அதிமுக எதிர்ப்பு நிலை, தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ந்து வருவதால் உள்ள அதிருப்தி நிலைமை, விஜயகாந்த் மறைவினால் உருவாகியிருக்கும் மாற்றுக் கட்சிக்கான வெற்றிடம் , மற்றக் கட்சிகளால் மக்களிடம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த முடியாதது ,ரஜினி அரசியலிருந்து பின்வாங்கியது மற்றும் கமலின் சினிமா / அரசியல் இரட்டைக் குதிரைச் சவாரி போன்ற பல்வேறு குழப்பங்கள் நிலவி வரும் இந்தச் சூழல் தான் அரசியலுக்கு வர சரியான நேரமென்று முடிவெடுத்து அதிகாரபூர்வமாக தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் கட்சியை விஜய் ஆரம்பித்துள்ளார். கட்சி ஆரம்பித்த பிறகு வரும் 2024 மக்களவைத் தேர்தலில் போட்டி இல்லை என்பதோடு யாருக்கும் ஆதரவும் இல்லை. ஆனால் வரவிருக்கும் 2026 தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். திரைப்படங்களில் நடிப்பதில் (?) இருந்து முழுமையாக விலகுவதாகவும் தெரிவித்துள்ளார் .

முதல்வன் திரைப்படத்தில் கலவரத்தை அடக்க கண்ணீர்ப் புகை கொண்டு கூட்டத்தை கலைக்கலாம் இல்லையாயென்று மணிவண்ணன் முதல்வராக இருக்கும் ரகுவரனை பார்த்துக் கேட்பார். அதற்கு அவர் "கூட்டம் கலையாது. என் ஆட்சி தான் கவிழும். ஏனென்றால் நான் முதல்வராக அமர்ந்திருக்கும் நாற்காலியின் நான்கு கால்களில் ஒன்று கூட்டணிக் கட்சி, மற்றொன்று ஜாதி அமைப்பின் ஆதரவு, மற்றொன்று ஆட்சியை நடத்த பணம் கொடுத்து பயன் பெறும் முதலாளிகள் மற்றும் கடைசிக்கால் தொண்டர்கள். அதனால் இதில் ஒரு கால் சேதமானாலும் என் பதவிக்குத் தான் ஆபத்து. கலவரம் தானாகவே அடங்கிவிடும்" என்று சொல்வார். இதுதான் தமிழ்நாட்டின் அரசியல் நிதர்சனம். அப்படியே இரண்டே நிமிடங்களில் தெளிவுபடுத்தியது மறைந்த எழுத்தாளர் சுஜாதா அவர்களின் வசனம். விஜயின் அரசியல் கட்சி எவ்வாறு வெற்றி பெறும் ? இப்போதுள்ள சூழ்நிலையில் அவருக்கு ஒரே ஒரு கால் அதாவது ரசிகர்கள் பலம் மட்டுமே உண்டு. கூட்டமாக அத்துணை ரசிகர்களும் அவருக்கே வாக்களிப்பார்கள் என்று சொல்ல முடியாது. கூட்டம் சேர்க்க நம்மவர்கள் ஊரிலிருந்து சிரிப்பு நடிகர்களைக் கூப்பிடுவதுண்டு. அவர்களைப் பார்க்க மக்களும் போவார்கள். ஆனால் திரையில் பார்த்து ரசித்து ஆராதனை செய்வது வேறு. பொதுவாழ்வில் அவர்களை நம்பி வாக்களிப்பது வேறு. அதுமட்டுமன்று விஜயைத் தவிர அவரது கட்சியில் உள்ள வேறு யாரையும் மக்களுக்குத் தெரியாது. தமிழ்நாட்டில் முதல்வராக குறைந்தது 118 உறுப்பினர்கள் வேண்டும். இன்னும் இரண்டு வருடங்களில் எவ்வாறு அடுத்த கட்டத் தலைவர்களை விஜய் தேர்ந்தெடுக்கப்போகிறார் என்று தெரியவில்லை. விஜயகாந்தின் அரசியல் முயற்சி தோல்வியானதற்கு முழுக்காரணம் அவரது கட்சியில் அவரையன்றி வேறு யாரையும் மக்களுக்கு தெரியாது என்பதே.

அரசியல் செய்வதற்கு கூட்டணி மிக அவசியம். விஜயகாந்த் சறுக்கியது இங்கே தான். 2017ஆம் ஆண்டில் தனியாக நிற்காமல் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்தால் அவரது கட்சி தப்பிப் பிழைத்திருக்கும். விஜய் கட்சியின் அரசியலும் , கொள்கையும் நமக்குத் தெரியாது. இதுவரை தெரிந்ததெல்லாம் அவரது கட்சி அறிக்கையான "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" மட்டுமே.பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் அரசியலில் பிழைத்திருக்க சாதிக் கட்சிகளின் தயவு வேண்டும். விஜய் அவர்களின் கிறித்துவ மத பின்புலத்தை வைத்து ஏற்கனவே பா .ஜ .க வின் ஹெச்.ராஜா ஜோசப் விஜய் என்று அரசியல் செய்தது நமக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா ? . எவ்வாறு ஜாதி , மத கட்சிகளிடையே விஜய் அரசியல் செய்யப்போகிறார் அதற்கான அரசியல் முதிர்ச்சி இருக்கிறதா ? . தெரியவில்லை. அரசியல் செய்வதற்கு மிக முக்கியமானது விட்டமின், அதாவது பணம். ஒன்று அவரிடம் குறைந்தது 5 முதல் 10 வருடங்கள் தாக்குப்பிடிக்க பல நூறு கோடிகள் வேண்டும் இல்லையென்றால் முதலீடு செய்வதற்கு பணமுதலைகள் வேண்டும். ஊழலை எதிர்ப்பதாகச் சொல்வதெல்லாம் சினிமாவில் தான் சாத்தியம். நிகழ்வாழ்வில் கட்சி நடத்த கறுப்புப் பணம் மிக அவசியம். அவரது ரசிகர்கள் அல்லது தொண்டர்கள் காசு இல்லாமல் தொண்டாற்றுவது நடைமுறையில் எந்த அளவிற்கு சாத்தியம் ? அவர் பா.ஜ.க.வை ஆதரிக்கவில்லை. தி.மு.க. ,அ.தி.மு.க. பக்கமும் இல்லை. அப்படி என்றால் இவருக்குப் பின்னால் எந்தப் பணக்கார முதலாளிகள் இருக்கிறார்கள் ? . ஆதலால் அவர் அரசியலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவென்றே தெரிகிறது.இந்த விஷயமெல்லாம் தெரிந்ததால் தான் மாபெரும் நடிகர் ( நிஜத்தில் மிக நன்றாகவே நடிக்கத் தெரிந்த) ரஜினிகாந்த் தனது உடல்நிலையைக் காரணம் காட்டி அரசியலில் இருந்து விலகுகிறேன் என்று சொல்லி பலகாலம் தனது ரசிகர்களை ஏமாற்றியதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து பணம் சம்பாதிக்கவும் வழி பார்த்துக்கொண்டார்.

ஏன் விஜய் அரசியலுக்கு வரக்கூடாதா என்று பலரும் கேட்கலாம். இதே கேள்வியை நடிகர் சிரஞ்சீவி அரசியலில் குதித்தபோது அப்போதைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி மிக நக்கலாகச் சிரித்துக்கொண்டே , " அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். சிரஞ்சீவியும் வரலாம் " என்று பதில் சொன்னார். முடிவில் என்னவாயிற்று. சிரஞ்சீவியால் தொடர்ந்து அரசியல் செய்ய முடிந்ததா ?. மூன்றே வருடத்தில் கட்சியை காங்கிரசுடன் சேர்த்துவிட்டு தனக்கு மட்டும் பதவியை வாங்கிக்கொண்டு தன்னை நம்பி வந்த ரசிகர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டார். விஜய் அவ்வாறு செய்ய மாட்டார் என்று நம்பலாம்.

அரசியல் வேறு ,சினிமா வேறு. சினிமாவில் ஒரு படம் தோல்வியடைந்தால் அடுத்த ஆறுமாதம் அல்லது ஒரு வருடத்தில் இன்னொரு திரைப்படத்தில் நடித்து அந்தப் படமும் வெற்றியடைந்தால் உங்கள் நட்சத்திர இடம் பறிபோகாது. இடைப்பட்ட காலத்தில் எதாவது விழாக்களில் கலந்துகொண்டு ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தலாம். ஆனால் அரசியலில் அப்படியில்லை. ஒரு தேர்தலில் தோற்றால் ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும் . அதுவரை தொண்டர் படைகளுக்கு தீனி போடவேண்டும். தொடர்ந்து எதிர்க்கட்சியாகவோ அல்லது மாற்றுத் தரப்பிலிருந்து கொண்டு போராடவேண்டும். அறிக்கைகள் கொடுக்கவேண்டும். இதெல்லாம் விஜய் செய்வாரா ?

இந்தக் காரணங்களையெல்லாம் விட மிக முக்கியமான குணாதிசயங்களாக நான் கருதுவது சாதுரியம்,சமயோசிதம், கூர்நோக்கு,முடிவெடுக்கும் திறன், தலைமைப் பண்பு, தடித்த தோல் .இதையே கலைஞர் பாணியில் சொல்லவேண்டுமென்றால் ராஜதந்திரம் அல்லது சாணக்கியம். இதுவரை நான் கவனித்த வரையில் சாதுர்யமும், சமயோசிதமும் உண்டு என்பதை இதுவரை படங்களில் நடித்து கோடிகோடியாக குவித்ததிலிருந்து அறிந்துகொள்ளலாம். கூர்நோக்கு மற்றும் முடிவெடுக்கும் திறன் மற்றும் ,தலைமைப் பண்பு குறித்து நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எந்த அளவிற்கு விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ளும் தடித்த தோல் இருக்கிறது என்பதை கூடிய விரைவில் அறிந்துகொள்ளலாம்.

இறுதியாக முத்தாய்ப்பாக ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு கட்டுரையை முடித்துக்கொள்கிறேன். மலையாள நடிகர் மம்மூட்டியிடம் ,"'நீங்கள் எப்போது அரசியலுக்கு வருவீர்கள்', என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் ,"'எங்கள் மக்கள் தங்களுக்கான தலைவர்களை திரையில் தேடுவதில்லை.தரையில் தேடுகிறார்கள்' என்று சொன்னார். இந்நாள் வரை தமிழ்மக்கள் தங்கள் தலைவர்களை திரையிலே தேடினார்கள் . இனிமேலும் தேடுவார்களா? என்பதை தமிழக வெற்றி கழகம் வெற்றி பெறுமா இல்லை மற்றுமொரு தமிழக முன்னேற்ற முன்னணி ( சிவாஜி கணேசன் தொடங்கிய கட்சி ) நிலை வருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# Sai Shree Foods Pty. Ltd.

**AUSTRALIA - CANADA - INDIA**

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# வேட்டுகளால் அதிரும் இலங்கை

சூழியன்

நடந்து செல்லும்போது காலில் ஒரு எறும்பு மிதி பட்டால்கூட, ‘ ஐயோ பாவம்! ‘ என நெஞ்சம் பதறும் மக்கள் கூட்டம் வாழ்ந்த நாட்டில், இன்று பட்டப்பகலில் - நட்டநடு வீதியில் நபர்களை சுட்டுக்கொல்லும் அளவுக்கு கொலைக் கலாசாரம் கோலோச்சியுள்ளது. இலங்கையில் பின்பற்றப் படும் அனைத்து மதங்களும் அன்பையும், அகிம் சையையுமே போதித்தாலும் இப்போது நடக்கும் சம்பவங்களை பார்க்கும்போது சமூகத்தில் குற்றச்செயல்கள் எந்தளவுக்கு ஆழமாக காலூன்றியுள்ளன என்பது புலனாகின்றது. புலி-களை ஒழித்து விட்டோம், தேசியப் பாதுகாப்பு பலமாகவே உள்ளது என மார்தட்டியவர்களெல்லாம் இந்தச் சம்பவங்களை பார்த்து விழிபிதுங்கி நிற்கின்றனர்.

2023 ஆம் ஆண்டிலும் இலங்கையில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் நடந்தன, துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நபர்கள் பலியான சம்பவங்களும் பதிவாகின. பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதல், போதைப்பொருள் வியா பாரம் உள்ளிட்ட விடயங்களால்தான் சினிமாப் பாணியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுவந்தன. இந்த நிலைமை தொடர்ந்தால் இலங்கையும் சிக்காக்கோ போல ஆகிவிடும் அபாயம் இருந்தது.

இந்நிலையிலேயே போதைப்பொருள் வியாபாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், பாதாளக் குழு உறுப்பினர்களுக்கு முடிவு கட்டுவதற்கும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் ‘யுக்திய’ எனும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ’ஒப்பரேஷன் யுக்திய’ முன்னெடுக்கப்பட்டுவரும் சூழ்நிலையிலும் படு பயங்கரமான துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையே இலங்கை வாழ் மக்களை கிலிகொள்ள வைத்துள்ளது.

## 2024 இல் முதல் துப்பாக்கிச்சூட்டு கொலை!

2024 ஆம் ஆண்டு பிறந்தவுடன் முதலாவது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஜனவரி 15 ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன தொடர்மாடிக் குடியிருப்புக்கு அருகில் வைத்து இரவு 8.30 மணியளவில் நபரொருவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஓட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 40 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட நிலையில் உயிரிழந்தார். ‘படா ரஞ்சி” என்றழைக்கப்படும் அழைக்கப்படும் செல்வம் ஆறுமுகன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்.

இந்தியாவில் தலைமறைவாகியுள்ள பாதாளக்குழு உறுப்பினர் ’பூகுடு கண்ணாவின்’ மிகவும் நெருக்கமான சகாவாக இவர் கருதப்படுகின்றார்.

நிழல் உலகத் தாதாவும், போதைப்பொருள் கடத்தல் மன்னனு மான கஞ்சிப்பானி இம்ரானின் தந்தை சில வருடங்களுக்கு முன்னர் வெட்டி படுகொலை செய்யப்பட்டிருந்தார். அந்த சம்பவத்துக்கு பழிதீர்க்கும் வகையில் கஞ்சிப்பானி இம்ரானின் சகாக்களால் இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

நிழல் உலக தாதா கஞ்சிப்பானி இம்ரான் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டிருந்தாலும், பின்னர் பிணையில் விடுதலையானதும், நாட்டைவிட்டு தப்பியோடினார் என்பது குறிப்பிடத்தக்கது. தப்பியோடிய அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## குறிமாறி நடந்த கொலை!

இதற்கிடையில் ஜனவரி 20 ஆம் திகதி மாத்தறை - தெலிஜ்ஜ வில பகுதியில் இனந்தெரியாத நபர்கள் இருவர் நடத்திய துப் பாக்கிச்சூட்டில் 22 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள் ளார். கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்குள் வைத்தே அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

தில்ஷான் மதுசங்க என்பவரே குறித்த நிலையத்தின் உரிமை யாளர், சம்பவத்தின்போது அவர் கடைக்குள் இருக்கவில்லை, அவர் என நினைத்தே கடைக்குள் இருந்த இளைஞர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில் உயிரிழந்த இளை ஞர் தொழில் வாய்ப்புக்காக தென்கொரியா நோக்கி செல்லத் தயாராகி இருந்தவர். எனினும், குறிதவறி அவர் கொல்லப் பட்டுள்ளார்.

தன்னைக் கொலை செய்யவே ஆயுததாரிகள் வந்துள்ளனர் என கடை உரிமையாளரான தில்ஷான் மதுசங்க தெரிவித் துள்ளார். இந்த கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது. சந்தேகநபர்கள் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன.

## இலங்கையை உலுக்கிய ஐவர் கொலை

’யுக்திய’ நடவடிக்கை தொடரும் நிலையில் இப்படியான துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், தாக்குதல்களும் நாட்டில் இடம்பெற்றுவந்த நிலையில், ஜனவரி 22 ஆம் திகதி நடைபெற்ற ஐவர் படுகொலையானது ஒட்டுமொத்த இலங்கையையும் உலுக்கியது.

தங்காலை நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை யொன்றுக்காக அபே பலவேகய கட்சியின் தலைவர் சமன் பெரேரா உட்பட ஐவர் வெள்ளை நிற டிபெண்டர் வாகனத்தில் பயணித்துள்ளனர்.

தெற்கு அதிவேக வீதியின் பெலியத்த வெளியேறும் பகுதிக்கு அருகில் காலை உணவை உண்பதற்காக அவர்கள் வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

அவர்கள் பயணித்த டிபெண்டரை பின்தொடர்ந்து வந்த பச்சை நிற பஜிரோவில் இருந்தவர்கள், சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதன்போது சாரதியைத்தவிர ஏனை யோர் வாகனத்தில் இருந்து இறங்கித் தப்பியோட முற்பட்ட னர். அவர்களையும் துரத்திச்சென்று துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் நால்வரும், தங்காலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் ஒருவரும் என் ஐவர் பலியாகினர். இந்தச்சம்பவம் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோனுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தி யது. வீராப்பு பேசிவந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசுக்கும் பெரும் அடியாக அமைந்தது. இதற்கிடையில் இது அரசின் வேலை என்ற கதையும் பரவியது.

இதனால் சம்பவத்தின் பின்புலம் தொடர்பில் கண்டறியவும், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகவும் ஆறு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன.

## முதல் கைதும் - வலையில் சிக்கிய புள்ளிகளும்

விசாரணை வேட்டையில் இறங்கிய பொலிஸார் சம்பவம் நடைபெற்று 48 மணிநேரத்துக்குள் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். கொலையாளிகள் பயணித்த ஜீப்பும் கைப்பற்றப்பட்டது. மாத்தறைப் பகுதியில் வைத்து 54 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் முக்கியமான பல தகவல்கள் வெளியாகின.

ஜனவரி 25 ஆம் திகதி மேலும் இருவர் சிக்கினர். காலி பகுதி யில் வைத்தே அவர்கள் மடக்கி பிடிக்கப்பட்டனர். சமன் பெரேரா உள்ளிட்ட தரப்பினர் தொடர்பில் இவர்களே உளவு பார்த்து தகவல்களை வழங்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. முதலாவது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் கைகூடி இருக்காத பட்சத்தில், தங்காலை நீதிமன்ற வளாகப் பகுதியில் வைத்து ஐவரையும் போட்டுத் தள்ளுவதற்கான ’பிளான் பி ’ இவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இவர்கள் இருவரும் விசாரணைப் பொறிக்குள் சிக்கினர். மேலும் பல தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

இதன்பிரகாரம் ஜனவரி 29 ஆம் திகதி இரு யுவதிகள் ஹக் மன பொலிஸாரால் ரத்கம பகுதியில் வைத்து கைது செய்தி ருந்தனர். 23 மற்றும் 33 வயதுடைய இரு பெண்களும் இவ்வாறு சிக்கினர். இருவரும் பூஸ்ஸ பகுதியைச் சேர்ந்தவர்கள். தாக்குத லுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை கொண்டுசென்றனர் என்ற குற்றச்சாட்டில் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலின் பின்னர் மோட்டார் சைக்கிள் ஊடாக கராப் பிட்டி பகுதியில் இருந்து பூஸ்ஸ பகுதிக்கு துப்பாக்கிகளை மோட்டார் சைக்கிளில் இவர்கள் கொண்டுவந்துள்ளனர்.

## பிரதான சூத்திரதாரியும் கொலை ஒப்பந்தமும்

விசாரணை வேட்டையில் புதிய புதிய தகவல்கள் கிடைக்கப் பெற, பிரதான சூத்திரதாரி இனங்காணப்பட்டார். அத்துடன், கொலை ஒப்பந்தம் தொடர்பான தகவல்களும் வெளியாகின.

கங்கா நிரோஷினி என்ற 39 வயது பெண்ணும், அவரின் தந்தையும் வெயாங்கொட பகுதியில் வைத்து கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த பெண்ணின் கணவர்தான் பிரதான துப்பாக்கிசூட்டுதாரியாக செயற்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

45 வயதான சந்தேகநபர் இலங்கைக் கடற்படையில் சேவை யாற்றியுள்ளார். சம்பவத்தின் பின்னர் வீடு சென்ற அவர், பாதுகாப்புத் தரப்புகளிடம் இருந்து தப்புவதற்காக ஒலுவில் பகுதிக்கு சென்றுள்ளார். பின்னர் வீடு வந்த நிலையில் ஜனவரி 29 ஆம் திகதி அதிகாலை இலங்கையில் இருந்து டுபாய் நோக்கிச் சென்றுள்ளார்

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள பாதாளக் குழு உறுப்பினர் கொஸ்கொட சுஜியின் சகா ஒருவர் ஊடாகவே ஐவர் கொலைக்கான ஒப்பந்தம் இலங்கையில் உள்ள தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. டுபாயில் உள்ள அந்நபரே பிரதான துப்பாக்கிதாரி தப்பிச்செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சமன் பெரேரா என்பவரும் சில குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார். அவருக்கும் கொஸ்கொட சுஜிக்கும் இடையில் போதைப்பொருள் வியா பாரம் தொடர்பில் பகைமை இருந்துவந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தப்பகைமையின் பிரகாரமாக கொலை ஒப்பந்தம் வழங்கப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இந்தச்சம்பவம் தொடர்பில் இன்னும் விசாரணைகள் தொடர்கின்றன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வழங்கும் வாக்குமூலத்தின் அடிப்படையிலான தகவல்களை வைத்தே விடயங்கள் தரப் பட்டுள்ளன. பொலிஸ் தரப்பில் இருந்து மேற்படி கொலைச்சம்ப வம் தொடர்பிலும், பின்புலம் பற்றியும் அதிகாரபூர்வ அறிவிப்பு உரிய வகையில் இன்னும் வெளியாகவில்லை.

## பிக்கு கொலை

ஐவர் படுகொலை இலங்கையை உலுக்கி இருந்த நிலையில் மறுநாள் ஜனவரி 23 ஆம் திகதி மற்றுமொரு படுகொலையும் பதிவாகியது. அதுவும் தேரர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். கம்பஹா, கஹடான கணாராம விகாரையிலேயே நண்பகல் 12 மணியளவில் இந்தப்பயங்கரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 45 வயதான பௌத்த பிக்கு ஒருவரே சுட்டுக்கொல்லப்பட்டார்.

காரொன்றில் வந்தவர்களே துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டு தப்பிச்சென்றனர். அத்துடன், கொலையாளிகள் பயணித்த கார் அடையாளம் காணமுடியாதவாறு தீயிட்டு கொளுத்தப் பட்டிருந்தது.

சி.ஐ.டி.யினர் எனக் கூறி விகாரைக்கு வந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

உயிரிழந்த தேரர் ஜோதிடம் பார்ப்பவர் எனவும், மந்திர, தந்திர வேலைகளைச் செய்யக்கூடியவர் எனவும் தெரியவரு கின்றது. எனவே, புதையல் அல்லது காணி பிரச்சினை யொன்றை அடிப்படையாக வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், விசாரணைகள் தொடர்கின்றன.

போர் முடிவுக்கு வந்தபின்னரும், துப்பாக்கிச் சத்தங்கள் இலங்கையை அதிரவைத்தபடியே உள்ளன.

# சிறப்பாக நடந்த ‘சிட்னிப் பொங்கல் திருவிழா’

நியு சவுத்வேல்ஸ் தமிழ் மக்கள் சார்பாக, பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு 33 தமிழர் அமைப்புகள் இணைந்து, சிட்னி பொங்கல் திருவிழா நிகழ்வு பொங்கல் நாளான ஜனவரி 15ஆம் திகதி திங்கட்கிழமை அன்று, மாலை 4 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு, தமிழீழம், மலேசியா, சிங்கப்பூர், மொறிசியஸ் பின்னணி கொண்ட தமிழர்கள் பலரும் கலந்துகொண்டதுடன் உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், நியு சவுத்வேல்ஸ் மாநில அவை உறுப்பினர்கள், மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் அன்ரூ சாள்ற்றன் மற்றும் ஏனைய சமூகங்களை சேர்ந்த நண்பர்களும் பங்குகொண்டிருந்தனர்.

கடும் மழைக்கு மத்தியிலும், ஐம்பது பானைகளில் பொங்கல் செய்து படையல் மேற்கொள்ளப்பட்டதுடன், 100 க்கும் மேற்பட்ட கலைஞர்களின் கலைநிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பன்னாட்டுத் தமிழர்கள் கலந்துகொண்டிருந்தனர். அவுஸ்திரேலிய பூர்வகுடிகளும் இணைந்துகொண்டு பொங்கல் பானையில் பொங்கி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

வருகைதந்த பூர்வகுடித் தலைவர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் வரவேற்று கௌரவிக்கப்பட்டனர். கலைநிகழ்வுகளாக, சிறார்கள் மற்றும் பெரியவர்களின் நடன நிகழ்வு, பாடல், பாரம்பரிய ஆடல் என்பனவும் கோலப்போட்டி, உறி அடித்தல் போட்டி, வினோதஉடை (மாறுவேட) போட்டி என்பனவும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கடந்த ஆண்டு உயர்தரப் பாடசாலைத் தேர்வில் தமிழ்ப்பாடத்தில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள், நீண்டகாலமாக தமிழ்மொழியை கற்பித்த ஆசிரியர், தலைப்பொங்கல் தம்பதிகள், தலைப்பிள்ளை பெற்றெடுத்த பெற்றோர், சிறந்த பொங்கல் பானைக்கான சிறப்பு பரிசில்கள் என பலர் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்தோடு சிறப்பு நிகழ்வாக நடைபெற்ற அதிட்டச் சீட்டுக்கான போட்டியில் முதலாவது பரிசாக 2 பவுண் தங்கநகையும், இரண்டாவது பரிசாக 1.5 பவுண் தங்கநகையும், மூன்றாவது பரிசாக 1 பவுண் தங்கநகையும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், விலங்குப்பண்ணை (animal farm), துள்ளல் மேடை(jumping castle) என்பனவும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

வருகைதந்த அனைவருக்கும் பொங்கல் மற்றும் சிற்றுண்டிகள் ஆகியவை வழங்கப்பட்டிருந்தன. விற்பனைக்கான உணவு நிலையங்களும், வணிகநிலையங்கள் அமைப்புகளின் தகவல் மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

கடும் மழை காரணமாக கிளித்தட்டுப் போட்டிகளும் கபடி காட்சி விளையாட்டும், சிறுவர் விளையாட்டுகளும் நடைபெறவில்லல. அந்தப்போட்டிகள் தமிழர் விளையாட்டு விழா நிகழ்வில் இன்னும் சிறப்பாக நடத்தப்பட்டு, பரிசில்கள் வழங்கி வைப்பதற்கான ஏற்பாடுகளை பொங்கல் ஏற்பாட்டுக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். அத்தோடு, தமிழர் பாரம்பரிய உடைகளோடு கலந்துகொண்ட ஒரு குடும்பத்திற்கான சிறப்பு பரிசிலும், பொங்கல் நிகழ்விற்கு தாங்களாகவே சிற்றுண்டிகளை தயாரித்துக்கொண்டு வந்திருந்தவர்களில் மூவருக்கு சிறப்பு சிற்றுண்டிகளுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.
















# குயீன்ஸ்லாந்தில் சிறப்புற நடைபெற்ற பொங்கல் விழா















குயீன்ஸ்லாந்து தமிழ் மன்றம், தாய்த்தமிழ் பள்ளியுடன் இணைந்து, பொங்கல் விழாவை விமர்சையாகக் கொண்டாடியது.

இவ்விழா பிரிஸ்பேர்ண் நகரின் சுற்றுலா மையமான, தெற்குக் கரை விழா மண்டபத்தில் ( south bank piazza) நடைபெற்றது.

இவ்விழாவில் பல்லின கலாசார அமைச்சர்கள், செனேட்டர் மற்றும் முக்கியமானபிரமுகர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

அதேவேளை, விளையாட்டுப் போட்டிகள்,பொங்கல், கோலப் போட்டிகள் என பார்வையாளர்களுக்கான நிகழ்வுகளும் நடைபெற்றன.



# தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா - 2024

## தமிழ் மரபை தேசமெங்கும் பறைசாற்றிய, மெல்பேர்னில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவின் மிகப்பெரும் பொங்கல் நிகழ்வு









"தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா' என்பது ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பன்முக கலாசார நிகழ்வுகளில் ஒன்றாகும் - தமிழ் சமூகத்தின் தனித்துவமான பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை நமது உயிர்ப்பான பன்முக கலாசார தேசத்துடன் ஒன்றாகக் கொண்டாடவும் பகிர்ந்து கொள்ளவும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்."

- கௌரவ Andrew Giles MP, குடிவரவு, குடியுரிமை மற்றும் பல்கலாசார விவகாரங்களுக்கான ஆஸ்திரேலிய அமைச்சர்







# அயோத்தி அரசியல்:
# பிரதான பூசாரியான பிரதமர்

**● அ.பாக்கியம்**

ஜனவரி 22 வர்ணாசிரம ராமருக்கு வகுப்புவாத மகுடம் சூட்டிய நாள். வர்ணாசிரம தர்மத்தை(?) பாதுகாக்கத்தான் ராமருக்கு பட்டாபிஷேகம் நடத்தப்பட்டது. தந்தை சொல் மதித்தல், தியாகம், அரவணைப்பு, சகோதரத்துவம் என ராமருக்கு பல்வேறு விதமான குறியீடுகள் இருந்தாலும் சம்புகனின் தலையைச் சீவியபொழுது அவர், சனாதன வர்ணாசிரம சித்தாந்தத்தையும் அரியணையில் ஏற்றினார். இன்று அதே ராமனின் பெயரால் இந்துத்துவா சக்திகள் இந்தியாவின் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களை தங்களுக்கு அடிபணியக்கூடிய காலனித்துவ முறைமையை அமுலாக்க முயற்சி செய்கின்றனர். அயோத்தி ராமரை அதற்கான அரசியல் கருவியாக பல பத்தாண்டு காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தியாவில் இதுவரை நடைபெற்ற வழிபாட்டுத் தலங்கள் திறப்பு நிகழ்ச்சி அனைத்தும் அதன் மதத் தலைவர்கள்-குருமார்கள் வழியாக நடைபெற்று உள்ளன. அது கோயில்களாக இருந்தாலும், தேவாலயங்களாக இருந்தாலும், மசூதிகளாக இருந்தாலும் இந்த நடைமுறை விதிவிலக்கு அல்ல. ஆனால், வரலாற்றில் முதல் முறையாக அயோத்தி ராமர் கோயில் திறப்பு நிகழ்வு நாட்டின் பிரதமரால், ஆர். எஸ். எஸ். தலைவரால் நிகழ்த்தப்பட்டிருப்பது இந்திய அரசியல் வரலாற்றில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதோடு பேரழிவுகளுக்கான அடித்தளமாகவும் அமைந்திருக்கிறது.

மதச்சார்பற்ற நாட்டின் பிரதமர், தானே ஒரு மதத்தின் தலைவராக மாறி நின்றார். அவரே ராமர் கோவில் விழாவை தொடக்கி வைத்தார் அந்த விழாவுக்கு முன்னோட்டமாக நடக்கும் அனைத்து மத நிகழ்வுகளையும் அவரே ஒருங்கிணைத்தார். அந்த விழாவுக்காக 11 நாட்கள் விரதம் இருந்தார். ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் என ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு ராமர் கோவில் விழாவுக்கான பூஜைகளை நடத்தினார். இதன் உச்சக்கட்டமாக ஜனவரி 22 ஆம் திகதி மதச்சார்பற்ற நாட்டின் பிரதமரே பிரதான பூசாரியாக மாறி கோவிலில் சிலையை பிரதிஷ்டை செய்கிறார். இதற்காக மருத்துவமனைகள் உட்பட மத்திய அரசின் அலுவலகங்கள் அனைத்துக்கும் அன்றைக்கு அரைநாள் விடுமுறை அளிக்கப்படுகிறது.

1948 ஜனவரி 30 ஆம் திகதி அந்திப்பொழுது. மகாத்மா காந்திக்கு அந்திமக் காலமான பொழுது. பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்ற காந்திஜி புன்னகை தவழ பலருக்கும் கைகூப்பி வணக்கம் சொல்கிறார். கோட்சே என்ற கொடியவன் துப்பாக்கிக் குண்டுகளால் மகாத்மாவுக்கு பதில் வணக்கம் சொல்கிறான். அகிம்சாமூர்த்தியை மதவெறி மாய்த்துவிட்டது. ஒரு குண்டூசி குத்தினால்கூட அனைவரும் அம்மா, அப்பா, அய்யோ என்றுதான் கத்துவோம். ஆனால் காந்திஜியோ 'ஹே ராம்' என இரண்டே வார்த்தையில் தன் உயிரை உதிர்த்தார். சாகும் தறுவாயிலும் ராம நாமத்தை உச்சரித்த அவரைவிடவா ஒரு ராமபக்தன் இருக்க முடியும்?

ஒரிஜினல் ராமபக்தரான மகாத்மா காந்தி, “எனது மதத்தில் நான் உறுதியாக நம்பிக்கை கொண்டிருப்பேன். அதற்காக நான் உயிரையும் விடுவேன். ஆனால் அது முற்றிலும் என் சொந்த விஷயமாகும். அதற்கும் அரசாங்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை” என்று அரசியலுக்கும் மதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை ஆணி அறைந்தாற்போல் சொல்லியிருக்கிறார். அத்தகைய ராம பக்தரையே சுட்டுக்கொன்ற கோட்சேயின் வாரிசுகளுக்கு ராமரின் பெயரை உச்சரிக்க அருகதை இருக்கிறதா என்று தெரியவில்லை.

இந்தியா விடுதலை பெற்ற பொழுது அயோத்தியில் பாபர் மசூதி இருந்தது. ராமர் கோயிலை இடித்து மசூதி கட்டப்பட்டது என்று இந்துத்துவா சக்திகளால் உருவாக்கப்பட்ட கதையும் மக்களிடம் செய்யப்பட்ட வெறுப்பு பிரசாரமும் சேர்ந்து 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி சங்பரிவாரங்களால் பாபர் மசூதி தகர்க்கப்பட்டது. அரசியல் ரீதியாக தீர்வு காணப்பட வேண்டிய ஒரு பிரச்சினை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக இந்துத்துவ சக்திகள் அதிகாரத்தில் இருந்ததால் நீதிமன்றம் ஆதாரத்தின் அடிப்படையில் சாட்சிகள் அடிப்படையிலேயே தீர்ப்புகள் வழங்கப்படும் என்ற நிலை மாறி, கோயில் இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றாலும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கை அடிப்படையில் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கோயில் கட்டுவதற்கான தீர்ப்பை வழங்கியது. இதன் தொடர்ச்சியாகத்தான் கடந்த ஜனவரி 22 ஆம் திகதி (22-1-2024) அயோத்தியில் ராமர் கோயில் என்ற பெயரால் ஒரு அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடித்தளமிட்டவர் தற்போது பாரதரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட எல்.கே.அத்வானி. அவர்தான் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவோம் என்று கூறி ரத யாத்திரை நடத்தி ரத்தகளறிக்கு ஒத்திகை பார்த்தவர். பா.ஜ.க.வின் மூத்த தலைவரான அவர், பிரதமர் பதவி விஷயத்தில் நரேந்திரமோடியால் ஓரம் கட்டப்பட்டு அரசியல் ஓய்வில் உள்ளார்.

கோயில்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்தவை என்று சொல்லப்படுவதெல்லாம் புராண காலத்தோடு போய் விட்டது. நவீன காலத்தில் கோயில்கள் தெய்வீகத் தன்மையுடன் பார்க்கப்படுவதில்லை வணிக ரீதியாகத்தான் பார்க்கப்படுகின்றன என்பது உண்மை. நவீன காலத்தில் உருவாகி இருக்கக்கூடிய கார்ப்பரேட் சாமியார்களின் உருவாக்கங்கள் அனைத்தும் தெய்வீகத்தன்மைக்கு அப்பாற்பட்டவையாக பார்க்கப்படுவதைப் போலத்தான் அயோத்தி பாலராமர் கோயிலும் உள்ளது. பிர்லா குடும்பத்தால் உருவாக்கப்பட்ட பிர்லா மந்திர், கோயில் என்பதை விட சுற்றுலாத்தலமாகத் தான் பார்க்கப்படுகிறது. திருப்பதி, பழனி போன்ற பல கோயில்கள் வேண்டுதலுடன் வந்து செல்லும் இடங்களாக உள்ளன. வேண்டுதல்களுக்காக பிர்லா மந்திர் கோயிலை யாரும் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை சடங்குகள் பூஜைகள் நடந்தாலும் அவை சுற்றுலாவுக்காகத்தான் நடத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது.

அயோத்தி பாலராமர் கோயிலையும் மதகுருமார்களிடம் இருந்து ஆர்.எஸ்.எஸ். கைப்பற்றி உள்ளது. அதை இந்தியாவில் வகுப்புவாத அரசியலை நடத்துவதற்கான ஒரு பெரும் கட்டமைப்பாக மாற்றி உள்ளது. இது அரசமைப்புச் சட்டம், ஜனநாயக, அரசியல், தார்மீக நெறிகள் அனைத்தையும் மீறி ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையாகும். இது புதிய அரசமைப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதை எழுத்துப்பூர்வமாக செய்யாமல் நடைமுறையில் இந்துத்துவாவை புகுத்தி மாநிலங்களின் ஒன்றியம் என்பதை தகர்த்து ஒற்றை அரசு என்ற நடைமுறையை அமுல்படுத்தும் ஏற்பாடாகும்.

அரசு நிர்வாகம், சட்டம் இயற்றும் மக்கள் பிரதிநிதி களவை, நீதித்துறை என ஒவ்வொன்றுக்கும் உள்ள அதிகாரங்கள் நிராகரிக்கப்பட்டு அனைத்து அதிகாரமும் பிரதமரின் கைக்குள் மாற்றப்படுகிறது. ஒருவரே அனைத்து அதிகாரத்தினதும் சொந்தக்காரர் என்பதை அரசியல் சட்டத்தை மாற்றாமலேயே அமுலாக்கிக் கொண்டதைதான் ராமர் கோயில் கட்டமைப்பின் திறப்பு நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

இந்துத்துவா நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுவது மட்டுமல்ல, 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி மற்றும் பா.ஜ.க., வட மாநிலங்களில் இழந்த செல்வாக்கை மீட்டெடுப்பதற்கும் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்போகின்றது.

பா.ஜ.க.வின் இந்த முயற்சி எதிர்க்கட்சிகளிடையே நிலவும் குழப்பங்களால் மேலும் பலமடைந்திருக்கிறது. ராமர் கோவிலை புறக்கணித்தால் நாம் செல்வாக்கு இழந்து விடுவோமோ என்ற அச்சத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சியினர். பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன் அயோத்தி ஒரு ஆன்மீகத் தலமாகத்தான் இருந்தது. தற்போது அது ஆன்மீகத் தலம் அல்ல அரசியல் தளம் ஆகிவிட்டது என்று சொல்வதற்கு கூட அஞ்சுகிறார்கள். ராமர் கோயில் கட்டுவதற்காக அயோத்தியில் சுமார் 15 கோயில்களும், ஏராளமான பாரம்பரிய மடங்களும், ஒரு மசூதியும் இடிக்கப்பட்டது என்பதைக் கூட இவர்கள் வெளியில் சொல்லத் தயங்குகிறார்கள். இந்த விஷயத்தில் இடதுசாரிகள் மட்டுமே தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

மதம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்தது. ஏராளமான மதம் சார்ந்த விழாக்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. அதில் மக்கள் பங்கேற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அயோத்தியில் நடைபெற்றது ஆன்மீகத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத ஒரு அரசியல் நிகழ்ச்சியாகும்.

மதச்சார்பற்ற இந்தியாவை சிதைத்து குறுகிய இந்துத்துவா நாடாக மாற்ற முயலும் பா.ஜ.க. தன்னுடைய தேர்தல் பிரசார மேடையாக ராமர் கோவிலை மாற்ற முயல்கிறது. இடதுசாரிகள் தவிர்த்த எதிர்க்கட்சிகள் மென்மையான இந்துத்துவாவை தூக்கி வீசி மதசார்பற்ற கருத்தாயுதத்தை வலுவான முறையில் முன்னெடுப்பது மூலமாகத்தான் இந்தியாவின் அரசியல் சட்டம் பாதுகாக்கப்படும் பன்மைத்துவமும் பாதுகாக்கப்படும்.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



# நிகழ்நிலைச் சட்டமும் அதன் உள்ளார்ந்த அச்சங்களும்

● சாம்பசிவம் ஹரிகரன்

இலங்கையில் அவசரமாகத் தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றப் பட்டு , அவசரமாக சபாநாயகரால் சான்றுரை அளிக்கப்பட்டு வர்த்தமானிப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக்காப்புச் சட்டம் பற்றிய சர்ச்சைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இச்சட்டமூலம் சட்டபூர்வமற்ற தன்மையின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சிகளும் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருவதால் இச்சட்டமூலம் பற்றிய கொதி நிலை இன்னும் குறைந்தபாடில்லை. இலங்கையின் அரசியலமைப்புச்சட்ட உருவாக்கமுறைமையின் கீழ் அரசியலமைப்புக்கு விரோதமான சட்டங்களை உருவாக்கலாம் என்பதற்கு இச்சட்டமூலமே சான்றாகும் என பல சட்ட நிபுணர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு முறைமையின் கீழான சட்ட ஆட்சியின் சமனிலைத் தலையீடு தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகி வருவதாகப் பல்வேறு தரப்புகளும் குரலெழுப்பி வருகின்றன. அதாவது உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட சில பரிந்துரைகள் சில உள்ளடக்கப் படாமல் நிறைவேற்றப்பட்டு சபாநாயகரினால் சான்றுரை அளிக்கப்பட்டதனால் அச்சட்டத்தின் மூலம் சட்டமுரண்பாடு ஒன்று தோன்றியிருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ .சுமந்திரன் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி இருக்கின்றார்.

அதாவது அரசியலமைப்பின் கீழ் இலங்கை உயர் நீதிமன்றத்திற்கு மாத்திரமே அரசியலமைப்பு பொருள் கோடல் சார் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது ஆனாலும் அந்த அதிகாரம் அரசியலமைப்பின் கீழ் வரையறுப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது அரசியலமைப்புக்கு விரோதமாக அதாவது அரசியலமைப்பின் 83 ஆம் சரத்திற்கு விரோதமாக ஒரு சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டால் அரசியலமைப்பின் கீழ் உயர் நீதிமன்றை நாட ஒவ்வொரு பிரஜைக்கும் சட்ட உரித்து உண்டு என்பதை இலங்கை அரசியலமைப்புச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. ஆனாலும் அச்சட்டமூலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க சாதாரண பெரும்பான்மையா, அறுதிப் பெரும்பான்மையா அல்லது அறுதிப்பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்புடனா நிறைவேற்றப்பட வேண்டும் என உத்தரவிடும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது அரசியலமைப்புக்கு விரோதமான ஒரு சட்ட முன்மொழிவை கூட முன்வைக்கும் சந்தர்ப்பத்தை இலங்கை அரசியலமைப்பு மறைமுகமாக வழங்கியிருக்கின்றது எனலாம்.

ஆனாலும் அரசியலமைப்பின் 79 ஆம் சரத்தின் கீழ் சபாநயகர் சான்றுரை அளிக்கப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நியதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதாவது அரசியலமைப்பின் 82 ஆம், 83 ஆம் ,123 ஆம் உறுப்புரைகள் காரணமாக சட்டமூலமொன்றை நிறைவேற்றுவதற்கு அறுதிப் பெரும்பான்மை தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலம் அத்தகைய விசேட பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே சபாநாயகர் சான்றுரை அளித்தல் வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது. ஆகவே சபாநாயகரின் சான்றுரையின் வலிது இங்கு சவாலுக்குட்படுத்தப்படுவதனால் இந்த சட்ட முரண்நிலை தோன்றியிருப்பதாக பல்வேறு சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் இச்சட்டமூலம் சபாநாயகர் சான்றுரை அளிக்கப்பட்டதன் பின் 80 ஆம் உறுப்புரையின் கீழ் சபாநாயகரின் சான்றுரை இறுதியானதும் முடிவானதுமாக இருந்தாலும் அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட முறைமையை சவாலுக்கு உட்படுத்த முடியுமெனவும் சில நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் இந்தச்சட்டமூலம் சட்டமாக இலங்கை அச்சகத் திணைக்களத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது எனவே இச்சட்டம் இலங்கையின் அடிப்படை உரிமைகளில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய ஆழமான முன்வைப்பை செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இச்சட்டமூலத்தின் முகவுரை பின்வருமாறு அமைகின்றது

இச்சட்டமானது நிகழ் நிலை ஆணைக்குழுவொன்றை உருவாக்குவதற்கும் , நிகழ் நிலை மூலமாக செய்யப்பட்ட தடை செய்யப்பட்ட கூற்றுகளுக்கெதிரான காப்பை வழங்குவதற்கும் , தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ் நிலை கணக்குகள் மற்றும் மெய்யுறுதிப்படுத்தப்படுத்தப்படாத(போலி) நிகழ்நிலைக் கணக்குகளின் பயன்பாட்டைத் தடுப்பதற்கும் , தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிகழ்நிலை அமைவிடங்களை அடையாளம் கண்டு வெளிப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், தடை செய்யப்பட்ட கூற்றுகளின் தொடர்பாடலுக்கான நிதியளித்தல் மற்றும் வேறு ஆதரவை ஒடுக்குதலுக்கும் அல்லது அவற்றின் நேர் விளைவான கருமங்களை ஒடுக்குவதற்கும் ஏற்பாடு செய்வதற்கான சட்டமாக இச்சட்டம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் யாருக்கு ஏற்புடையாகும் என சட்டம் தெளிவாக வரையறுக்கின்றது

‘ஆளொருவர் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு ‘வெளியே சமுகமாயிருக்கையில் இலங்கைப் பிரஜை ஒருவர் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றவிடத்து சட்டம் ஏற்புடைமையாகும்’ என கூறப்பட்டுள்ளது. அதாவது இது இலங்கைப் பிரஜையற்ற ஆளொருவர் இலங்கையில் சமுகமாயிருக்கையில் இலங்கைப் பிரஜை ஒருவருக்கு எதிராக இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தால் குற்றவாளியாக்க சட்டத்தின் கீழ் இடமிருப்பது பாரதூரமான அம்சமாகும் .

இச்சட்டத்தின் தவறொன்றை புரிவதன் மூலம் அரசுக்கு அல்லது இலங்கையில் வதிவுள்ள ஆளொருவருக்கு இலங்கையினுள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே இழப்பு சேதம் அல்லது தீங்கொன்று விளைவிக்கப்படுகின்றவிடத்து இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்க முடியும். அத்துடன் எவ்விடத்தினுள் புரியப்பட்டிருந்தாலும் இலங்கைப் பிரஜையொருவரால் புரியப்பட்டிருந்தாலும் இச்சட்டம் ஏற்புடைமையாகும் எனச் சட்டம் தெளிவாக கூறுகின்றது.

எனவே இந்தச்சட்டத்தின் அடிப்படைகள் மற்றும் தன்மைகள் தொடர்பில் இலங்கைப் பிரஜைகள் மட்டுமன்றி இலங்கைக்குள் பிரவேசிக்கும் யாவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

இச்சட்டத்தின் கீழ் நிகழ் நிலை ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட உள்ளது. குறித்த ஆணைக்குழு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்தை பெற்றதில் இருந்து 14 நாட்களுக்குள் ஜனாதிபதி அங்கீகாரத்தை பெற்ற நபர்களை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமித்தல் வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது. குறித்த ஆணைக்குழுவானது மூன்றாண்டுகள் கொண்ட காலத்திற்கு பதவி வகிக்கும் எனச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது.

குறித்த ஆணைக்குழுவின் அதிகாரங்களாக பின்வரும் அதிகாரங்கள் அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

1)ஏதேனும் தடை செய்யப்பட்ட கூற்றினால் பங்கமான முறையில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பதிலிறுப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்குமாறு, அத்தகைய தடை செய்யப்பட்ட கூற்றை வெளியிட்டுள்ள ஆட்களை / இணைய சேவை வழங்குநர்களை / இணைய இடையீட்டாளர்களை தேவைப்படுத்தி பணிப்புரைகளை வழங்குதல்.

2) தடை செய்யப்பட்ட கூற்றை அறிவிக்கின்ற ஆட்களுக்கு அத்தகைய கூற்றுகளை அறிவிக்கப்படுவதனை நிறுத்துமாறு தகவலை வழங்குதல்.

3)தடை செய்யப்பட்ட கூற்றொன்றை கொண்டுள்ள நிகழ்நிலை அமைவிடமொன்றுக்கான அணுக்கத்தை இல்லாமலாக்குதலுக்கு, அத்தகைய அமைவிடத்தில் இருந்து தடை செய்யப்பட்ட கூற்றை அகற்றுமாறு ஏதேனும் இணைய சேவை வழங்குநர்கள் அல்லது இணைய இடையீட்டாளர்களுக்கு அறிவித்தலை வழங்குதல்.

4) நீதிமன்றத்தை அவமதிப்பதாக இருக்கக்கூடிய அல்லது நீதித்துறையின் அதிகாரம் பக்கச்சார்பின்மையின் பேணுகைக்கு பங்கமாகவுள்ள எவையேனும் தொடர்பாடல்களை தோதான நீதிமன்றின் (அரசியலமைப்பின் 105.3 அல்லது சட்டத்தின் கீழான ) கொண்டு செல்லல் .

இலங்கையில் இறுதிப் பயநர்களுக்கு சமூக வலைத் தளங்களை வழங்கும் இணையத்தளங்களை இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் பதிவு செய்தல் .

இறுதிப்பயநர்களுக்கு இணைய அடிப்படையில் தொடர்பாடல் சேவையை வழங்கும் இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு விதிகள் என்ற வகையில் ஒழுங்குமுறைக் கோவையை வழங்கல்

ஆகியன உட்பட்ட அதிகாரங்கள் வரையறுப்புச் செய்யப்பட்டுள்ளன.

அதாவது மேற்குறித்த ஆத்திரமூட்டலின் கீழ் கலகத்தவறு புரியப்படின் ஐந்து ஆண்டுகள் விஞ்சாத இருவகை மறியல் தண்டனைஅல்லது ஐந்து லட்சத்தை விஞ்சாத குற்றப்பணம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம். ஆனால் கலகத்தவறு புரியப்படாத போது மூன்று ஆண்டு இரு வகை மறியல் மூன்று லட்சத்தை விஞ்சாத குற்றப்பணம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்பட்டு, குற்றவாளியாக்கப்படலாம் என சட்டம் கூறுகின்றது.

அடுத்ததாக பொய்யான கூற்றை அறிவிப்பதன் மூலம் மதக் கூட்டம் ஒன்றை குழப்புதல், மத உணர்வுகளை நிந்திப்பதற்கு பொய்யான கூற்றுக்கள் பற்றிய திட்டமான வன்மமான தொடர்பாடல் செய்வோர் ஆகியோரும் குற்றவாளியாக்கப்படலாம் எனச் சட்டம் கூறுகின்றது.

நிகழ் நிலையில் ஏமாற்றுதல் அதாவது பொய்யான கூற்றை அறிவிப்பதன் மூலம் ஆளொருவரை வஞ்சித்தலும் குற்றமாக சட்டம் கூறுகின்றது. அத்துடன் ஆள் மாறாட்டம் செய்தலும் சட்டத்தின் கீழ் குற்றமாகின்றது அதாவது நிகழ் நிலைக் கணக்கொன்றினூடாக வேறு ஆளொருவராக பாசாங்கு செய்தல், அறிந்து கொண்டு ஓராளுக்காக வேறொருவரை பதிலீடு செய்தல் என ஆள் மாறாட்டம் செய்தலும் குற்றமாகின்றது . இவ்வாறு ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் மூன்று ஆண்டுகள் மறியல் மூன்று லட்சம் குற்றப்பணம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படகூடிய குற்றவாளியாக்கப்படலாம் எனச் சட்டம் கூறுகின்றது.

இச்சட்டத்தின் கீழ் படைக்கலகத்தை அல்லது அரசுக்கெதிராக தவறொன்றை ஏற்படுத்தும் உட்கருத்துடன் பொய்யான அறிக்கையொன்றை பரப்புதலும் குற்றமாக கொள்ளப்படுகின்றது. இச்சட்டத்தின் முக்கியமான ஏற்பாடாக தொல்லையை ஏற்படுத்துவதற்கான குற்றம் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் நிகழ்நிலைக் கணக்கொன்றினூடாக இலங்கைக்கு உள்ளும் வெளியும் புரியப்படின் அது குற்றமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

இச்சட்டத்தின் கீழ் பொதுமக்கள் குறித்த ஆணைக்குழுவை நாடுவதற்குரிய வழிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும் கேட்பதற்கும் விளங்குவதற்கான மற்றும் தீர்மானிப்பதற்கான நியாதிக்கம் நீதிவான் நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தவறொன்றைப் புரிதல், தவறொன்றைப் புரிய எத்தனித்தல் , தவறுக்கு உடந்தையாதல், தவறொன்றை புரிய சதி செய்தல் என்பனவும் குற்றமாக அடையாளப்படுத்தப்படுகின்றது

## இச்சட்டத்தின் கீழ் குற்றங்கள்

இலங்கையிலும் சரி, இலங்கைக்கு வெளியிலும் சரி பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பு , பொதுச் சுகாதாரம் அல்லது பொது ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற அல்லது மக்களின் வெவ்வேறு வகுப்பினரிடையே வெறுப்பு மற்றும் பகை உணர்வுகளைத் தூண்டும் எவரேனும் இந்தச்சட்டத்தின் கீழ் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மீது ஐந்து ஆண்டுகள் விஞ்சாத மறியல் அல்லது ஐந்து லட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் எனச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது.

அரசியலமைப்பின் நீதிமன்ற 105 (3) அல்லது எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி, நீதிமன்ற அவமதிப்பு தவறொன்றை தண்டிப்பதற்கான விசேட நியாயாதிக்கத்தினை பிரயோகிக்கின்ற நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தின் படி நீதிமன்ற அவமதிப்பாக அமைகின்ற கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ் நிலை அமைவிடமொன்றூடாக பொய்யான கூற்றொன்றை அறிவிக்கும் ஆள் குற்றவாளியாவார் எனச் சட்டம் கூறுகின்றது.

இலங்கையிலும் சரி இலங்கைக்கு வெளியிலும் சரி ஏதேனும் ஆத்திரமூட்டல் அல்லது தூண்டுதல் கலகத்தவறொன்றினை புரியும் என உட்கருதி அல்லது அவ்வாறு செய்யக்கூடும் என அறிந்து கொண்டு நிகழ்நிலைக் கணக்கொன்றின் ஊடாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றூடாக பொய்யான கூற்றை அறிவிப்பதன் மூலம் எவரேனும் ஆளை தீய எண்ணத்துடன் அல்லது தேவையின்றி ஆத்திரமூட்டுகின்ற ஆள் குற்றவாளியாக்கலாம் என சட்டம் கூறுகின்றது

எனவே இலங்கையின் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்த ஆபத்தான ஜனநாயக முரண் தன்மையின் ஏற்பாடுகளை கொண்ட சட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பினை வெளியிடத் தவறவில்லை. இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்கனவே இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவைகள் மற்றும் ஏனைய நாடாளுமன்ற சட்டக் கோவைகளில் இருக்கின்ற போது அவற்றில் திருத்தங்களை முன்வைத்து நிகழ்நிலைக் குற்றங்களை தடுக்க முனைவதை விடுத்து இத்தகைய அவசரச் சட்டத்தின் உருவாக்கம் ஏனென்ற கேள்வியும் அச்சமும் பலரிடம் ஏற்படாமலில்லை. தாம் சர்வதேச நாடுகளுக்கு நிகராக சட்டமூலமொன்றை உருவாக்கியதாக மார்தட்டும் இலங்கை அரசு பிரித்தானிய மற்றும் இதர நாடுகளின் நிகழ்நிலைக் காப்பு சட்டத்தில் காணப்படும் கருத்துச் சுதந்திரத்தின் பாதுகாப்பின் நோக்கம் இச்சட்டமூலத்தில் உள்ளடக்கப்படாமை ஏனென்ற கேள்வியும் எழாமலில்லை.

அத்துடன் பொருள் கோடல் தவறுகளை விட்டதன் நோக்கம் அமுல்படுத்தப்படுதலில் சர்வதிகாரத் தன்மை வெளிப்படுமா என்ற அச்சம் அனைவரின் மனதிலும் எழாமலில்லை. குறிப்பாக இச்சட்டமூலத்தில் பொய்யான கூற்று என அடையாளப்படும் சொல், பொருள் கோடல் பகுதியில் சட்டரீதியாக தவறுகள் ஏற்படாத வகையில் பொருள் கோடல் செய்யப்படவில்லை என்ற விமர்சனம் பலரால் முன்வைக்கப்படுகின்றது. எனவே இச்சட்டமூலம் எதிர்காலத்தில் இலங்கையில் இடம்பெறவுள்ள தேர்தல்களின் போது மாற்றுக்கருத்தாளர்களின் வாயை மூடுவதற்கு ஏவப்படுமா என்ற அச்சம் பலரிடம் மேலெழுகின்றது. அத்துடன் ஊழல்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் வெளிப்படுத்தும் தரப்புகள், ஊடக நிறுவனங்களின் சுதந்திரத்தையும் இந்த சட்டம் கட்டுப்படுத்தப்பட பயன்படுத்தப்படுமா என்ற அச்சம் அனைவர் மத்தியிலும் எழுகின்றது. எனவே தொகுத்து நோக்கின் இந்தச்சட்டத்தினை மீளுருவாக்கம் செய்து தவறுகளை சீர் செய்யாத வரைக்கும் பொதுமக்களின் பங்கேற்பு ஜனநாயகம் ,மக்கள் இறைமை, அடிப்படை உரிமைகள் , கருத்து சுதந்திரம், பேச்சு மற்றும் எழுத்துரிமை , சட்டத்தின் ஆட்சி போன்றவை மீறப்பட இச்சட்டமூலம் வழிவகுக்குமா என்ற அச்ச உணர்வு அனைவர் மத்தியிலும் எழுகின்றது. ■

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



தற்பொழுதைய ஆஸ்திரேலிய அரசியலில் பேசு பொருளாக இருப்பது Stage Three Tax Cuts. 2018 ஆம் ஆண்டில் அன்றைய பிரதமராக இருந்த Scott Morrison அரசு கொண்டு வந்த இடைக்கால திட்டம் தான் இந்த Tax Cut. 2019 ஆம் ஆண்டு அன்றைய எதிர்கட்சியாக இருந்த Labor Party யின் ஒப்புதலுடன் அமுலுக்கு வந்தது.

இந்த Tax Cut ஐ மூன்று பகுதிகளாக பிரித்து அமுல்படுத்தலாம் என்று திட்டமிட்டார்கள். அதன்படி முதல் பகுதியான Tax Cut ஜூன் 2022 அன்றில் இருந்து நடைமுறைக்கு வந்தது. இரண்டாம் கட்ட Tax Cut 2020-21 ஆம் நிதியாண்டு நடைமுறைக்கு வந்தது. ஆட்சி மாற்றத்திற்கு பின் ஜூலை 1 முதல் மூன்றாம் கட்ட Tax Cut ஐ நடைமுறைக்கு கொண்டு வர Anthony Albanese அரசு திட்டமிட்டு, எதிர்க்கட்சிகளின் ஒப்புதலுக்கு காத்திருக்கிறது. Liberal கட்சி கொண்டு வந்த திட்டத்தை அமுல் படுத்த Labor கட்சி முனையும் பொழுது ஏன் இவ்வளவு சர்ச்சை ஆக இதற்கு தான் Liberal கட்சி தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சி தலைவரான Peter Dutton மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்று கூறி இருக்கிறார். 2GB க்கு அவர் அளித்த பேட்டியில் "பிரதமர் கொடுத்த வாக்குறுதியை நம்பி மக்கள் தங்கள் பட்ஜெட்டை வடிவமைத்திருப்பார்கள். ஆனால் அந்த நம்பிக்கையை அவர் உடைத்துவிட்டார். இந்தப் புதிய Tax Cut மூலம் சிலருக்கு கொஞ்சம் பணம் கூடுதலாக கிடைக்கலாம். ஆனால் அது இந்த ஆட்சியில் உயர்ந்து கொண்டிருக்கும் கடன் தொகையால் பயனற்றதாக போகும். இந்த ஆட்சியில் பணவீக்கம் நீண்ட நாட்கள் தொடரும்" என்று தெரிவித்துள்ளார்.

உண்மையில் பழைய செயல் திட்டத்தால் பெரும்பான்மை மக்களுக்கு பயனா? இல்லை புதிய திட்டத்தால் பயனா? என்பதை நாம் எந்த வரிவிகிதப் பிரிவில் வருகிறோம் என்பதை பொறுத்தே இருக்கிறது.

ABCயின் ஆய்வின் படி, வேலைக்கு செல்லும் இளைஞர்களே, அதாவது Gen Z இளைஞர்கள், அதிகம் Tax Cut பெரும் பணக்காரர்களுக்கு மட்டுமே பயனளிப்பதாக இருந்தது. மற்றவர்களுக்குப் பெரிதாக பயன் இல்லை' என்கிறார். புதிய Tax Cut இல் பெண்கள் செய்யும் 427 பணிகளில் வெறும் 9 பணிகளில் இருப்பவர்கள் மட்டுமே பயன் இழப்பவர்களாகவும் ஆண்கள் செய்யும் 435 பணிகளில் 21 பணியில் இருப்பவர்கள் மட்டுமே பயன் இழப்பவர்களாகவும் இருப்பார்கள். இழப்பவர்களை விட லாபம் பார்ப்பவர்கள் அதிகம். $180,000 மேல் சம்பளம் பெறுபவர்களே அதிகம் இலாபமானவர்களாக இருப்பார்கள். அதேபோல ஓய்வூதியம் பெறுபவர்களுக்கோ வேலையற்றவர்களுக்கோ இதில் எந்த நன்மையையும் இல்லை என்கிறது ABC யின் ஆய்வு.

Labor கட்சி , தன் தேர்தல் அறிக்கையில் இருந்து பின் வாங்கியதைக் குறித்து Australia Institute இன் இயக்குநர் Richard Denniss பேசும் பொழுது 'நான் இன்று இந்த அரங்கிற்கு வருவதற்கு முன் வேறு ஒரு நிகழ்ச்சிக்குச் செல்ல ஒப்புக் கொண்டிருந்தேன். அந்தச் சத்தியத்தை மீறிவிட்டேன். ஏன் மீறினேன்? பெரியவர்கள் (grown ups) அதைத்தான்

# புதிய வரித்திட்டம்
# கழுத்தை நெரிக்குமா? தலையை நிமிர்த்துமா?




சுமதி (கன்பரா)

வேண்டும்? மூன்றாம் கட்ட Tax Cut இல் சில மாறுதல்களை Labor கட்சி கொண்டு வந்துள்ளது.

Stage 1 மற்றும் 2 Tax Cut இன் படி 32.5% வரி பிரிவின் குறைந்த பட்ச வருமானம் $87,000 இல் இருந்து $90,000 ஆக உயர்த்தப்பட்டது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈடுபவர்களுக்கான வரித்தள்ளுபடி அளிக்கப்பட்டது. இது வெறும் இடைக்கால நிவாரணம் மட்டும் தான். இதை அமுல்படுத்திய பொழுது பிரதான கட்சிகளிடம் எந்த சர்ச்சையும் எழவில்லை.

Morrison அரசு கொண்டு வந்த Stage 3 Tax Cut படி, இரண்டாம் வரிப்பிரிவாகிய 32.5% வரியை 30% மாக குறைத்து, $120,000 உச்ச வரம்பை $200,000 மாக உயர்த்த வேண்டும். அதன் படி Anglicare Australia வின் அறிக்கை படி $180,000 pa சம்பாதிப்பவர்களுக்கு கூடுதலாக கூ6,000 வரித்தள்ளுபடியும், $200,000 pa சம்பாதிப்பவர்களுக்கு கூடுதலாக $9,000 வரித்தள்ளுபடியும் $60,000 pa சம்பாதிப்பவர்களுக்கு கூடுதலாக $390 வரித்தள்ளுபடியும் கிடைக்கும். இதனால் அரசிற்கு வரிவருமானம் இழப்பு அடுத்த 10 ஆண்டுகளுக்கு $324 பில்லியனாக இருக்கும்.

இந்த வரித்தள்ளுபடியில் எந்த மாற்றத்தையும் கொண்டு வர மாட்டோம் என்று தனது தேர்தல் வாக்குறுதியில் கூறி இருந்தது Labor கட்சி. Labour கட்சி கொண்டு வந்த மாற்றம் 19% வரி விகிதத்தை 16%வும், 32% வரி விகிதத்தை 30%வும் குறைத்து, 37% வரி பிரிவின் உச்ச வரம்பை $120,000ல் இருந்து $135,000 மாகவும், 45% வரிப்பிரிவின் உச்ச வரம்பை $180,000ல் இருந்து $190,000 மாகவும் உயர்த்தியுள்ளது. தற்பொழுதைய வரி விகிதமும் Stage 3 Tax Cut இல் முன்மொழியப்பட்ட வரி விகிதத்தையும் கீழ்க்கண்டவாறு ஒப்புமைப்படுத்தி பார்த்துக்கொள்ளலாம்.

| 2023-24 | | 2024-25 | |
|---|---|---|---|
| Thresholds ($) | Rates (%) | Thresholds ($) | Rates(%) |
| 0 – 18,200 | Tax free | 0 – 18,200 | Tax free |
| 18,201 – 45,000 | 19 | 18,201 – 45,000 | 16 |
| 45,001 – 120,000 | 32.5 | 45,001 – 135,000 | 30 |
| 120,001 – 180,000 | 37 | 135,001 – 190,000 | 37 |
| Over 180,000 | 45 | Over 190,000 | 45 |

பயன்பெறுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. Gen X தலைமுறையினர் பழைய திட்டத்தில் இருக்கும் பயனை விட புதிய திட்டத்தில் குறைந்த பயனையே பெறுவார்கள். இதற்குக் காரணம், அவர்களில் பலர் , பல ஆண்டு காலமாக பணி புரிந்து, அதிகபட்ச வருமான வரி விகிதத்தில் இருப்பதே. பழைய திட்டத்தில் அதிகம் பயன்பெறுபவர்கள் பணக்காரர்களே என்று கருத்தும் உலாவுகிறது. இது எந்த அளவிற்கு உண்மை என்பதைப் பார்ப்பதற்கு முன், புதிய திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சங்களாக அரசு தெரிவிப்பவற்றைப் பார்ப்போம்.

கீழ் மற்றும் நடுத்தர வருமானம் உள்ளவர்கள் உயர்ந்து வரும் பண வீக்கத்தால், அடிப்படைத் தேவைகளான உணவு, மருத்துவம், வீட்டு வாடகை மற்றும் வீட்டு கடன்களுக்கு செய்யும் செலவுகளைக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான Medicare வரியின் உச்சவரம்பை உயர்த்தும் திட்டமும் உள்ளது. இதனால் குறைத்த வருமானம் ஈட்டும் 10 லட்சம் மக்கள் பயனடைவார்கள். அடுத்த 18 மாதங்களில் பணவீக்கம் எதிர்பார்த்த அளவிற்கு குறையும் வாய்ப்பு உள்ளதால், அதன் அடிப்படையில் இந்த Tax Cut வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டத்தில் $146,486 க்கு கீழ் வருமானம் உள்ளவர்கள் அதிக வரித் தள்ளுபடி பெறுவர். இது தொழிலார்களை ஈர்க்கும், குறிப்பாக பெண்களை. பகுதி நேரப் பணிக்குச் செல்லும் பெண்களும், குறைந்தகல்வித் தகுதியால் குறைவான சம்பளம் பெறுபவர்களுக்கும் அதிக பயனளிக்கும். வருமான வரி செலுத்தும் ஆசிரியர்கள், செவிலியர்கள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிப் பணி மனைத் தொழிலாளர்கள் மற்றும் குழந்தைகள் காப்பகத் தொழிலாளர்களில் 90% பெரும் வரித்தள்ளுபடியைப் பெறுவார்கள். இவை அனைத்தும் அரசு கொடுக்கும் விளக்கங்கள்.

Australian Institute இன் தலைமைப் பொருளாதார நிபுணர் Greg Jericho இது குறித்துக் கூறும் பொழுது 'பழைய செய்வார்கள். RBA கவர்னர் வட்டி விகிதம் 2024 வரை ஏறாது என்றார். ஆனால் 13 முறை வட்டி விகிதம் உயர்ந்தது. நிலைமைக்குத் தகுந்தவாறு மாற்றிக்கொள்வதை தான் grown ups செய்வார்கள்' என்றார்.


Sky க்கு அளித்த பேட்டியில் துணை எதிர்க்கட்சித் தலைவரான Sussan Ley 'அடுத்தமுறை Liberal ஆட்சிக்கு வந்தால் இந்த tax cut ஐ மாற்றி அமைக்குமா?' என்று கேட்ட பொழுது , அவர் 'அதுதான் எங்கள் நிலைப்பாடு. அதுதான் நிச்சயமாக எங்கள் நிலைப்பாடு. அதுதான் டுயபடிழச ரின் நிலைப்பாடாகவும் இருந்தது' என்று பதில் அளித்தார். அதற்கு மறுநாளே 'நாங்கள் இந்தத் திட்டத்தை மாற்றி அமைப்போம் என்று கூறவில்லை. தற்பொழுதுள்ள stage 3 tax cut க்கு ஆதரவாக இருக்கும் அதே வேளையில் புதிய திட்டத்தையும் மதிப்பீடு செய்வோம்' என்றார்.

Liberal இந்த புதிய tax cutஐ எதிர்க்கும் பட்சத்தில், அதை அமுல்படுத்துவதற்கு Labor அரசிற்கு Greens கட்சியின் ஆதரவு தேவைப்படலாம். Greens இன் நிலைப்பாடு என்னவாக இருக்கிறது? Labor மேற்கொண்டுள்ள tax cut 'பத்தவே பத்தாது' என்கிறார்கள். வரியற்ற வருமான உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்பது தான் Greens இன் நிலைப்பாடு. $190,000 மேல் சம்பாதித்தவர்கள் $4,500 வரை வரித்தள்ளுபடி பெறுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறது. $180,000 க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு Labor அரசு அடுத்த பத்து வருடத்திற்கு $84 பில்லியன் செலவு செய்ய இருக்கிறது என்கிறது Greens தரப்பு.


இந்தப் புதிய tax cut அமுலுக்கு வருமா? இல்லை மாற்றங்களுக்கு உள்ளாகுமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

Anthony Albenese கடைசியாக 'விலைவாசி உயர்வில் இந்த நிவாரணம் எங்களின் தொடக்கம் இல்லை, முடிவும் இல்லை. மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்'என்று கூறி இருக்கிறார்.

பொறுத்திருந்து பாப்போம்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



# காசாவில் அழிக்கப்படும் கலாசாரம்

● சபா. தயாபரன்

காசா உலகின் பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்று. இது மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நகரமும்கூட. இதன் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான கலாசாரம் இஸ்ரேலினால் திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டதாக பிரெஞ்சு வரலாற்றாசிரியர் Jean-Pierre குடைரை சுட்டிக்காட்டியுள்ளார்.

“காசாவின் வளமான நாகரீகம் - பல ஆயிரக்கணக்கான வரலாற்றைக் கொண்ட பலவிதமான போர்களைச் சந்தித்துள்ளது. எகிப்திய பாரோக்கள் (Egyptian Pharaohs) பாபிலோனியர்கள் (Babylonians ) பெலிஸ்தியர்கள் (Philistines ) மற்றும் அலெக்ஸ்சாண்டர் (Alexandaer ) உட்பட பலர் காசா நகரை முற்றுகையிட்டு ஆண்களைக் கொன்று பெண்கள், குழந்தைகளை அடிமைப்படுத்திள்ளனர்.” எனவும் அவர் விவரித்துள்ளார்.

இஸ்ரேலைப் பொறுத்தளவில் கடந்த 75 ஆண்டுகளில் காசாவுக்கு எதிராக 15 போர்களை நடத்தியிருக்கிறது. எனினும், முக்கியமான பிரச்சினைகள் போர்களினால் தீர்க்கப்படவில்லை.

ஆபிரிக்காவையும் , ஆசியாவையும் இணைக்கும் வர்த்தக நிலையமாக காசாவின் வளமான வரலாறு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று ஹோஸ்ட் ஸ்டீவ் கிளெமன்ஸிடம் கூறியுள்ளார். இந்த நிலையில் இஸ்ரேல், காசாவின் வரலாறு மற்றும் அதன் பாரம்பரிய அடையாளங்களை அழித்தது மிலேச்சத்தனமானதும் - மனித சமுதாயத்துக்கு எதிரானதும் ஏற்றுக் கொள்ள முடியாததும் என்கிறார் வரலாற்று ஆசிரியர் ஹோஸ்ட் ஸ்டீவ் கிளெமன்ஸி.

காசாவின் பாரம்பரியத் தளங்களான புராதன மசூதிகள், தேவாலயங்கள், அருங்காட்சியகங்களை இஸ்ரேல் அழித்தமை குறித்துக் கருத்து கூறுகையில், மனிதகுலத்தின் நினைவுகள் அதன் வரலாற்றுப் பெருமைச் சின்னங்கள் கண் முன்னே இஸ்ரேலினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதப் பிற்பகுதியில், இஸ்ரேலிய ஷெல் தாக்குதலில் காசா நகரின் மத்திய காப்பகக் கட்டடம் அழிக்கப்பட்டது. இதில் 150 ஆண்டுகளுக்கு முந்தைய ஆயிரக்கணக்கான வரலாற்று ஆவணங்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

“இந்த ஆவணங்கள் எங்கள் வரலாறு மற்றும் கலாசாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன” என்று காசா மேயர் யஹ்யா அல்-சர்ராஜ் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சமூகத்தின் வரலாற்று மதிப்பை எடுத்துக் காட்டும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள Birzeit பல்கலைக்கழகம் , பெரிதும் சேதமடைந்த நகராட்சிக் கட்டடத்தின் உள்ளே இருந்து புகைப்படங்களை வெளியிட்டது.

“ இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு காசா நகராட்சியின் மையக் காப்பகத்தை அழித்தது, ஆயிரக்கணக்கான வரலாற்று ஆவணங்களைச் சேதப்படுத்தியது . மேலும் அனைத்து வாழ்க்கை வடிவங்களையும் வேண்டுமென்றே அழிக்கிறது, நகரத்தையும் அதன் வரலாற்றையும் அழிக்கிறது. இந்தக் காப்பகத்தில் நூறு ஆண்டுகளுக்கும் மேலான ஆவணங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.” என்றார்.

காப்பகங்களுக்குள் வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள், காசா நகரின் நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்களுடன், தலைமுறை தலைமுறையாக முக்கியமான தேசியப் பதிவுகள் மற்றும் காசா மற்றும் அதன் மக்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

“அவர்கள் எங்கள் பாரம்பரியத்தைக் குறிவைக்கிறார்கள், இது மிகவும் பயமாக இருக்கிறது. இஸ்ரேலிய அரசின் வயதை விட நூற்றுக்கணக்கான ஆண்டுகால வரலாறு காசா வாழ் மக்களாகிய எங்களிடம் உள்ளது, மேலும் உள்ளூர் மக்கள் வசிக்கும் இடத்தின் நினைவை அவர்கள் அழிக்க விரும்புகிறார்கள்”

“இது 1948 இல் தொடங்கியது, வரலாற்று ஆவணங்கள் தொலைந்து போனது, பின்னர் 1982 இல் இஸ்ரேலியப்படையெடுப்பின் போது பெய்ரூட்டில் உள்ள ’பிஎல்ஓ ’காப்பகம் சூறையாடப்பட்டதன் தொடர்ச்சி போல் தெரிகிறது” என்று பாலஸ்தீன அரசியல் ஆய்வாளரான கலீல் சயீக் (காசா பகுதியில் பிறந்து வளர்ந்தவர்) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

காசா மீதான இஸ்ரேலின் போரில் சுமார் 27,000 இற்கு மேலான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர், அவர்களில் 70 வீதம் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

அதே சமயம் காசாவின் தொல்பொருள் தளங்கள், அருங்காட்சியகங்கள், கலாசார மையங்கள், சந்தைகள், பண்டைய தேவாலயங்கள் மற்றும் மசூதிகள் போன்ற பல வரலாற்று மற்றும் கலாசாரக் கட்டடங்களை இஸ்ரேல் அழித்துள்ளது.

இஸ்ரேலின் போர் தொடங்கியதில் இருந்து வான்வழித் தாக்குதல்களால் தாக்கப்பட்ட முக்கியமான மதத் தலங்கள், பாலஸ்தீனத்தின் பழமையான மற்றும் மிக முக்கியமான மசூதிகளில் ஒன்றான கிரேட் ஓமரி மசூதி என்பனவும் அழிக்கப்பட்டன. செயிண்ட் போர்பிரியஸ் தேவாலயத்தின் மீதும் குண்டுவீச்சுநடத்தப்பட்டது. 425 CE இல் இது நிறுவப்பட்டது.

காசா பழைய நகரத்தின் மையத்தில் உள்ள மசூதி, குறைந்தது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவர்கள் அல்லது முஸ்லிம்களின் புனிதத் தலமாக இருந்து வருகிறது. காசாவின் மையத்தில் அமைந்துள்ள 1,000 ஆண்டுகள் பழமையான கிரேக்க ஆர்த்தடாக்ஸ் தேவாலயம், உலகின் மூன்றாவது பழமையான தேவாலயமாக நம்பப்படுகிறது.

1985 இல் நிறுவப்பட்ட ஒரு முக்கியமான கலாசார மையமான ரஷாத் அல்-ஷாவா வரலாற்றுக் கலாசார மையம், சுமார் 20,000 புத்தகங்களை வைத்திருக்கும் தியேட்டர் மற்றும் நூலகத்தை நடத்துகிறது. இவையும் விமானத் தாக்குதல்களில் கணிசமான சேதத்தையும் அழிவையும் சந்தித்தன.

பாலஸ்தீன மக்களின் போராட்டத்தின் அடையாளமாக அறியப்பட்ட சிப்பாயின் நினைவுப் பூங்காவில் பாலஸ்தீனிய சட்ட சபையின் (பிஎல்சி) நினைவுச்சின்னம் மற்றும் 2,000 ஆண்டுகள் பழமையான ரோமானியக் கல்லறை என்பன வடக்கு காசாவில் கடந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன.இவையும் கிட்டத்தட்ட முற்றிலும் வான்வழித் தாக்குதல்களினால் அழிக்கப்பட்டன.

காசாவின் முதல் அறியப்பட்ட துறைமுகம் மற்றும் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பூர்வாங்கப் பட்டியலில் உள்ள மூன்று தளங்களில் ஒன்றான Anthedon துறைமுகம் இஸ்ரேலிய வேலைநிறுத்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது, அதே நேரத்தில் காசாவில் உள்ள முக்கிய நூலகம், வரலாற்று ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பெரும்பாலானவை அழிக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்களுக்கு அடைக்கலம் அளித்து வந்த காசா நகரில் உள்ள கிரேக்க ஆர்த்தடாக்ஸ் செயிண்ட் போர்பிரியஸ் தேவாலயத்தின் மீது ஒக்ரோபர் 20 அன்று இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் குறைந்தது எட்டு பேர் கொல்லப்பட்டனர். குறைந்தது ஆறு முக்கிய கலாசார மையங்களும் சேதமடைந்துள்ளன, அவற்றில் நூற்றுக்கணக்கான கலைப்பொருட்கள் அடங்கிய காசாவின் பாரம்பரியத்தைப் பற்றி கற்பிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இடமான ரஃபா அருங்காட்சியகம் பகுதி இடிந்து விழுந்தது. அத்தோடு கான் யூனிஸில் உள்ள அல் கராரா கலாசார அருங்காட்சியகமும் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

146 ஆண்டுகள் பழமையான வீடுகள் மற்றும் நூற்றுக்கணக்கான வரலாற்றுக் கட்டடங்களைக் கொண்ட பழைய நகரமான காசா நகரின் பெரும்பாலான பகுதிகளை இஸ்ரேலிய இராணுவம் வெறி கொண்டு அழித்துள்ளது. இஸ்ரேலின் போரின் தொடக்கத்தில் இருந்து, பாலஸ்தீனிய ஆணையத்தின் கலாசார அமைச்சகம் ’ஒன்பது பதிப்பகங்கள் மற்றும் நூலகங்கள் குண்டுவீசி தாக்கப்பட்டதாக ’பதிவு செய்துள்ளது, குறைந்தது 21 கலாசார மையங்கள் பகுதி அல்லது முழுமையாகச் சேதமடைந்துள்ளன.மேலும் 20 வரலாற்றுக் கட்டடங்கள் அழிக்கப்பட்டு சேதமடைந்தன.

விரிவான மற்றும் துல்லியமான தகவல்களைப் பெறுவது மற்றும் சரிபார்ப்புகளை மேற்கொள்வது சாத்தியமற்றதாக இருக்கும் நிலைமைகளின் காரணமாக கலாசார பாரம்பரியத்திற்கு ஏற்பட்ட சேதம் பற்றிய ஆரம்ப மதிப்பீட்டை மட்டுமே காசா அமைச்சகம் வழங்கியிருந்தது.

# கங்காரு தேசத்து முதலைகள்

(சிறுகதை)



சபா.தயாபரன்

காலையில் எழும்பும்போதே செல்வத்திற்கு இடுப்பு வலி அதிகமாகி உடம்பு அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. நேற்று செல்வம் வேலை செய்யும் கட்டட வேலைத்தளத்தில் கொங்கிறீற் வேலை. கொங்கிறீற் வேலை உடம்பை துவம்சமே செய்து விடும்.போதாக் குறைக்கு ராசனும் பிரதீப்பும் வேலைக்கு வரவில்லை. ஞாயிற்றுக்கிழமை அடித்த விஸ்கி கூடி இருக்கும். விஸ்கி அடித்த மயக்கத்தில் காலையில் 4 மணிக்கு எழும்பி வேலைக்கு வருவதென்றால் அதை விடக் கஷ்டம் எதுவுமில்லைதான். அவர்களின் வேலையையும் செல்வத்தோடு சேர்த்து சுதன், ராகவன் தலையிலேயே விழுந்தது. கடும் வேலை.அதனால்தான் உடம்பு இப்படி சோர்ந்து போய் வலி கூடி இருந்தது. இன்றைக்கு லீவு எடுத்தது ஆப்கானிஸ்தான் கொண்ரக்டருக்கு பிடிக்கவில்லை. நிலைமையை விரிவாக விளங்கப்படுத்திய பிறகே அரை மனதுடன் சம்மதித்தான்.

ஐந்து மணிக்கு எழும்ப வேண்டும் என்று அலாரத்தை செற் பண்ணி வைத்த செல்வம் மூன்று தடவை அடித்த அலாரத்தை அட்ஜெஸட் பண்ணி பண்ணியே காலை 5 மணிக்கு வைத்த அலாரம் இப்போது 5.45 ஐக் காட்டியது.உலகத்திலேயே மிக மோசமான ஒலி எதுவென்றால் குளிர்காலத்தில் அடிக்கும் இந்த அலாரத்தின் ஒலியாகத்தான் இருக்கும். அதை அனுபவித்தவர்களுக்கே புரியும். இனியும் எழும்பாமல் இருக்க முடியாது . ஒரு படியாக குளித்து வெளிக்கிட்டு, சென் அல்பன்ஸ் ரெயில்வே ஸ்ரேசனுக்கு வந்தபோது 7 மணியாகி விட்டிருந்தது. காதில் குண்டூசி போல் நுழைந்து உடம்பை நடுங்க வைத்து செல்வத்தை பதம் பார்த்துக் கொண்டிருந்தது குளிர். ஆரம்பத்தில் இங்கு வந்த போது இந்த குளிரினால் இவன் உடம்பு இப்படிப் பாதிக்கப்படவில்லை. அவுஸ்திரேலியா வந்த புதிதில் பேச்சு வாக்கில் ஒருநாள் அருள் சொன்னவன்தான் “இப்ப உனக்குத் தெரியாது அண்ணே. ஏனென்றால் ஊரில கைக்குத்தரிசியுடன் அண்டைக்கே பிடிச்சமீன் நல்ல காய்கறி மரக்கறி சாப்பிட்டு திடமா வந்திருப்பீங்கள்.இஞ்சத்தைய ஐஸ் மீனையும் இந்த பழைய மரக்கறியையும சாப்பிட்டு உன் உடம்பு இசைவாக்கம் அடையும் போதுதான் இந்த குளிரின் வேகம் உனக்குப் புரியும்.” அது எவ்வளவு உண்மை என்று செல்வத்திற்கு இப்போது புரிந்தது.

குளிரின் அதிக தாக்கத்திற்கு செல்வம் அணிந்திருந்த ஜக்கற்றினால் ஈடு கொடுக்க முடியவில்லை. காலையில் வரும் போது கால நிலையைப் பார்க்காமல் வந்தது எவ்வளவு மடத்தனம் என்று செல்வத்திற்கு புரிந்தது. இல்லாவிடில் மற்ற ஜக்கற்றை அணிந்து வந்திருக்கலாம்.

காரை ரெயில்வே ஸ்ரேசன் பார்க்கிங்கில் விட்டு இறங்கியபோதுதான் குளிரின் உக்கிரம் புரிந்தது.

பரமேஸ்வரன் லோயர் வரச் சொல்லி ஒரு கிழமையாகி விட்டது விட்டது. இனியும் தாமதித்தால் அவருக்கு “கொதி” ஏறிடும். அவரின் காரியாலயத்திற்கு காரில் போவதென்றால் பார்க்கிங் கிடைப்பது கஸ்டம். இரண்டு முறை போய் வந்ததில் 96 டொலர் வேறு அபராதம் கட்டியாயிற்று.மெல்போர்ன் நகரின் மத்தியில் இருந்த பெரிய கட்டடத்தில் எட்டாவது மாடியில்தான் பரமேஸ்வரன் லோயரின் அலுவலகம் இருந்தது. இருந்தது. ஐந்து வருடத்திற்கு முந்தி பரமேஸ்வரன் லோயரிடம் போனபோது சிறிய அலுவலகமாக இருந்த காரியாலயம் இப்போது பெரிய காரியாலயமாக விசாலப்படுத்தப்பட்டு இருந்தது. அதற்கு செல்வத்தைப் போன்ற பல “ஏமலாந்திகளின் பங்களிப்பும்” காரணமாயிருக்கும். பரமேஸவரன் லோயர் எப்படித்தான் சிரித்து ஜோக்காக பேசினாலும் காசு விடயத்தில் அவரின் வழமையான கறாரான “முதலை” “முகம் வந்து மீளும். நீண்ட முதலையை ஞாபகப்படுத்தும் முகம் அவருடையது. அதற்கேற்ற பெரிய கண். தன் “இடவு” “பிளந்த பல்லைக் காட்டி கோபத்துடன் கத்தும் போது வெளிப்படும் பெரிய மூச்சு முதலையை மீண்டும் ஞாபகத்தில் கொண்டு வரும்.

காரில் அவரின் அலுவலகத்திற்குப் போவதை விட ரெயினில் போவது லேசு. பார்லிமென்ற் ஸ்ரேசனில் இறங்கி ஒரு பத்து நிமிஷம் நடந்தால் அவரின் காரியாலயத்திற்கு போய்விடலாம்.

லோயரிடம் போவதென்றால் செல்வத்திற்கு மட்டுமல்ல செல்வத்தைப் போன்றே படகில் ஏறி அவுஸ்திரேலியா வந்து பரமேஸ்வரன் லோயரின் வாடிக்கையாளராகி விட்டவர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்து விட்ட மாதிரி இருக்கும். ஆங்கிலம் தெரியாமல் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வந்து அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு பரமேஸ்வரன் போன்ற தமிழ் வக்கீல்களின் காரியாலயம் தான் சரணாலயம்.இவர்களின் அறியாமையே அவர்களின் முதலீடு.செல்வத்தைப் போன்றவர்கள் இந்த ஒரு சில தமிழ் வக்கீல்களின் கணிப்பில் தங்க முட்டை இடும் வாத்துக்களாகவே இருந்தார்கள்.

இலங்கைத் தமிழ் வக்கீல்களில் ஓரிரு பேரைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே பணத்துக்கு அலையும் ஒரே குளத்தில் ஊறிய மட்டைகளே.ஆசை வார்த்தை காட்டி மூளைச்சலவை செய்து காசை லாவகமாக கறந்து விடுவதில் ஆகாய சூரர்கள்.இவர்களிடம் பச்சாபதாபம் எதையுமே எதிர்பார்க்க முடியாது. குறி என்னவோ பணம்தான். பொது வெளியில் தமிழ் இன விடுதலை, ஒற்றுமை, விடியல் என்று ஏதோ தமிழ் உணர்வாளர்கள் போன்று தங்களைக் காட்டிக் கொண்டு கூக்குரலிட்டாலும் உள்ளுக்குள் இவைகளை வைத்து சூசகமாக வியாபாரம் செய்யும் நவீன வியாபாரிகள்தான் இவர்கள். செல்வத்தைப் போன்றவர்களுக்கு இது புரிய வாய்ப்பில்லை. அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை கூட காரணமாக இருக்கலாம்.

செல்வம் குழப்பத்தில் இருந்தான். இது வரைக்கும் இந்த ஐந்து வருஷத்திற்கிடையில் இலங்கைக்காசு இருபது லட்சத்திற்கு மேல் பரமேஸ்வரன் லோயருக்கு கொடுத்தாயிற்று. காலையிலும் இரவிலும் நித்திரை இல்லாமல் கஷ்டப்பட்டு உழைக்கும் காசை மிக சாதாரணமாக பரமேஸ்வரன் லோயருக்கு கொட்டிக் கொடுக்கும் போது ஏற்படும் வலி மிகக் கொடியதே. அவர் மேல் சில அபிப்பிராயங்கள் இருந்தாலும் செல்வம் போன்றவர்களுக்கு அவர் ஒரு தவிர்க்க முடியாதவராகவே இருந்தார்.

முதல் வழக்கு தோல்வியடைந்த போது பரமேஸ்வரன் லோயர் சாதாரணமாகவே சொன்னார். “இஞ்ச பார் செல்வம் நீ உண்மையாக இலங்கை ராணுவத்திற்கு பயந்து உயிர் தப்பத்தான் இங்கு வந்தனீயென்று எனக்குத் தெரியும். ஆனா நீ கொடுத்த வாக்கு மூலங்களைப் பார்க்கும் போது உன்ர கேஸ் கொஞ்சம் வீக் போலத்தான் அவர்களுக்கு விளங்கியிருக்க வேண்டும். அதனாலதான் ரிஜெக்ட் ஆகிட்டு. என்னத்தில ரிஜெக்ட் ஆகிற்று எண்டு அவங்க சொல்ற காரணங்களுக்கேற்றவாறே நாங்கள் பைலை கொஞ்சம் விபரமாக தயாரிச்சுக் கொடுக்க வேணும் .இதில ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும் செல்வம் .உண்மையாக உயிருக்குப் பயந்து உண்மையில இராணுவத்தால பாதிக்கப்பட்டு வாறவங்க தாங்கள் உண்மையாக பாதிக்கப்பட்டவங்க என்ற பெரும் நம்பிக்கையோடுதான் வாரங்க. ஆனா அவங்க கேஸ் கொடுக்கக்குள்ள கொஞ்சம் கவனக்குறைவா இருந்திடுவாங்க. ஆனா ஓரளவு பாதிக்கப்பட்டவங்க கேசுக்கு ஏற்றமாதிரி சம்பவத்தை தயாரித்து கேசை வெல்ல வைப்பதில் மகா கில்லாடிகள்.சில சமயங்களில உண்மையை விட கற்பனை உணர்வும் இந்த கேசுக்குத் தேவை”

பரமேஸ்வரன் லோயர் கதைத்து சமாளித்து ஆட்களை நம்ப வைப்பதில் பலே பேர்வழி.அவரின் பசப்பு பேச்சில் மகுடிக்கு மயங்கும் பாம்புபோல மயங்கியே அவர் கேட்கும் காசை ஏன் என்று கேட்காமல் கொடுத்து விடுவார்கள்.அப்படி ஒரு மன நிலையை ஏற்படுத்தி நம்ப வைத்து லாவகமாக பணத்தைக் கறந்து விடுவார்.இந்த ஐந்து வருடத்திற்கிடையில் மெல்போனில் மேலும் இரண்டு வீடுகள் வாங்க அவரால் எப்படி முடியும்...?

ஊரில் கடல் தொழில் மட்டுமே செய்து காலத்தை கடத்திய செல்வத்திற்கு இவற்றை எல்லாம் ஆரம்பத்தில் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. வழக்கு, அகதி, இமிக்கிறேசன், விசாரணை ரிஜக்ற் எல்லாம் ஆரம்பத்தில் எல்லாம் புரியாத புதிரான வார்த்தைகளாகவே இருந்தன. பரமேஸ்வரன் லோயர் சொல்வதே வேத வாக்காகவும் அவர் தங்களை ரட்சிக்க வந்த ஆபத்பாந்தவராகவும் இன்னல்களில் இருந்து காப்பாற்ற வந்த இரட்சகராகவுமே நம்பினார்கள்.

அன்று ஒரு அமாவாசை இரவு ஊர் அடங்கிய சமயத்தில் ஒரு வெள்ளை வான் செல்வத்தின் கேற்றடியில் வந்து நிற்கிறது. அதிலிருந்து மூன்று ஆயுதம் தரித்தவர்கள் மூவர் இறங்கி வருகின்றனர். முகத்தை மூடி முகக் கவசம் அணிந்திருந்தார்கள். இருந்த அவர்கள் கதவைத் தட்டுகிறார்கள். தூக்கக் கலக்கத்தில் கதவைத் திறந்த செல்வத்தின் முகத்தில் திகைப்பு.

“செல்வம் உங்கட போட் கொஞ்ச நேரம் தேவைப்படுகிறது.ஒரு மூன்றுமணித்தியாலம் வேலைதான்.விடிய முன்பு விட்டிடுவம்.”

செல்வத்தினால் மறுக்க முடியவில்லை. வந்தது ‘அவர்கள்’ என்பதால். அந்த குரல் செல்வத்திற்கு பரிச்சயமான ஒருவரின் குரல் என்பதாலும் அவர்கள் செல்வத்தால் அடையாளப் படுத்தப்பட்டனர் .

“என்னப்பா இந்த நேரத்தில எங்க போகப் போறீங்க” பத்மா கேட்டாள்.

“அவங்கதான் வந்திருக்காங்க ஏலாண்டு சொல்ல முடியாதப்பா”

கடற்கரை ஓரமாக தங்க வைத்திருந்த செல்வத்தின் இயந்திரப் படகில் சில கனமான பெட்டிகள் ஏற்றப்பட்டன. செல்வமும் கூட மாட உதவி செய்தான்.அவை என்ன என்று செல்வத்தால் கேட்க முடியவில்லை. கேட்டால் சொல்ல மாட்டார்கள் என்றும் செல்வத்திற்கு தெரியும். இது மாதிரித்தான் போன தடவை சாமான்கள் ஏற்றிய போது செல்வம் கேட்க தாடி வைத்திருந்தவன் முறைத்த முறைப்போடு செல்வத்திற்கு பயம்வந்து விட்டது. எனினும் அவை ஆயுதங்கள் என்று மட்டும் இவனால் ஊகிக்க முடிந்தது. இரண்டு மணி நேர இரவைக் கிழித்தபடி கடல் பயணம். படகு கரை தட்டியபோது லேசாக விடிந்து விட்டிருந்தது. அது ஒரு தென்னை மரங்கள் சூழ்ந்த ஒரு இடம். நடுவே சிறிய குடிசை கரையோரத்திலிருந்து சற்றுத் தள்ளி இருந்த அந்த குடிசைக்குள் சாமான்கள் படகிலிருந்து அப்புறப்படுத்தப்படுத்தப் பட்டன. எல்லாம் இறக்கிய பிறகு அந்த தாடி வைத்தவன் செல்வத்தை நோக்கிவந்தான். அவன் கையில் பணநோட்டுக்கள்.

“செல்வம் இதை வச்சிக் கொள்ளு “

“ வேணாம் அண்ணை....”

“இல்ல வச்சிக்க போன முறைக் காசும் இதில. இருக்கு .எங்களுக்குத் தெரியும் இது ரிஸ்க்கான வேலை என்று.ஆனா எல்லோரிட்டையும் கேட்க முடியாது தானே செல்வம்”

அவன் குரலில் தெரிந்த ஒரு நெருக்கமும் கண்டிப்பும் செல்வத்தை மறுக்காமல் காசை வாங்கிக் கொள்ள வைத்தன.

இரண்டு நாள்கழிந்திருக்கும் .எது நடக்கக் கூடாது என்று பயந்திருந்தானோ அது நடந்தது.

கேற்றடியில ஒரு ஜீப் வந்திறங்குகிறது. திடு திடு என்று வந்து இறங்கியது இராணுவ வீரர்கள் .அவர்கள்முகத்தில் அப்படி ஒரு கடூரம்.

“செல்வம் எங்க “.

“கடலுக்கு போயிருக்கார் “

நல்ல வேளையாக செல்வம் வீட்டில் இல்லை பத்மா பதிலளித்தாள்.

“வந்தா ஆமிக் கேம்புக்கு வரச் சொல்லுங்க “ கொச்சைத் தமிழில் அவன் வார்த்தை அதே சமயம் கண்டிப்புடன் இருந்தது.

செல்வம் வந்தபோது பத்மா கேட்டாள்.

“அண்டைக்கு அவங்கள ஏத்தி விட்டு வந்த போது ஆரும் கண்டவளாங்கப்பா?”

“கொஞ்சம் விடிஞ்சிற்று எண்ட படியால் கடலுக்குப் போனவர்கள் கண்டிருக்கலாம்”

“என்ன செய்யப் போறீங்க..?”

ஆமிக்காரங்கள் வந்து போன விடயத்தைச் சொல்லி விட்டு செல்வத்தின் விடைக்காக காத்திருந்தாள் பத்மா.

“என்ன முடிவெடுக்கிற எண்டு தெரியல்லப்பா. சைமனும் இப்படித்தானே அவண்ட போட்டில சாமான் ஏத்தின என்று யாரோ சொல்லத்தானே அவன வரச் சொல்லி விட்டு இப்ப ஆளும் இல்ல அவன்ட போட்டும் இல்ல .ஒளிச்சித்திரியிற எண்டாலும் எத்தனை நாளைக்குத்தான் திரியிற.?.”

செல்வத்தின் குரலில் ஒரு தளர்வு.

அது நடந்த மூன்றாவது நாளில் தான் படகில் அவுஸ்திரேலியா போக இருப்பதாக பத்மாவிடம் சொன்னான்.

பத்மா கலக்கத்தில் இருந்தாள்.

“ராசாண்ணனிற்கு தெரிஞ்சவராம் அவுஸ்திரேலியாவிற்கு போட்டில அனுப்பிறாராம் நம்பிக்கையாவராமப்பா. என்ன செய்யச் சொல்கிறாய்..?உன்னத் தனியாக குழந்தைகளுடன் விட்டுச் செல்வதுதானப்பா கஷ்டமாக இருக்கு. கடைசி பிறந்து 6மாசம் கூட ஆகல்ல அதுக்குள்ள..”

“நீங்க எப்படியோ உயிரோட இருந்தா எனக்குச் சரி.சமாளிக்க வேண்டி வந்தால் சமாளிக்கத்தானே வேண்டும்.”

(20ஆம் பக்கம் பார்க்க)

# கங்காரு தேசத்து முதலைகள்

(சிறுகதை)

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் வழி நடத்தப்பட்ட நர்சரி ஆசிரியையான பத்மாவால் தனியாக நின்று எதையும் எதிர் கொண்டு சமாளிக்கும் ஒரு ஆளுமையும் தைரியமும் அவளிடம் ஏற்கனவே இருந்தது என்பது அவளை நேசித்த நாளில் இருந்தே செல்வம் அறிவான்.

ரெயினின் கோர்ன் சத்தம் காதைத் துளைத்தது.

மெல்போனில் ரெயின் வரும் போகும் நேரங்கள் அட்டவணையில் குறிப்பிட்டது போல சரியாகவே பயணப்படும்.

ரெயினில் அவ்வளவு கூட்டமில்லை.

ரெயினில் பார்லிமென் ஸ்ரேசனில் இறங்கிக் கொண்டான்.

பரமேஸ்வரன் லோயரின் காரியாலயத்தை அடையும் போது ஏற்கனவே நான்கு பேர் அவரின் வரவேற்பறையில் அம்ர்ந்திருந்தனர். அதில் இருவர் தாயும் மகனுமாக இருக்க வேண்டும்.

அங்கு இவனோடு போட்டில் வந்த ராசனும் இருந்தான்.

"செல்வம் கொஞ்சம் வெயிற் பண்ணு இவங்களை முடிய கூப்புடுகிறன்" லோயர் இவனிடம் பவ்வியமாகச் சொன்னார்.

" என்னவாம் லோயர்?" செல்வம் ராசனிடம் கேட்டான்.

"ஆரோ பரிஸ்டராம். அவர்தானாம் வழக்குப் பேசப் போறாராம்.அந்த பைலுகளை தயாரிச்சுக் கொடுக்க வேணும் எண்டுதான் இண்டைக்கு என்னை வரச் சொன்னவர்"

ராசன் பேசிக் கொண்டிருக்கும் போதே ராசனை பரமேஸ்வரன் லோயர் கூப்பிட்டார்.

"நீங்க எத்தனையாவது போட்? " பக்கத்திலிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணி செல்வத்தைப் பார்த்துக் கேட்டாள்.

படகில் வந்திறங்கும் எல்லோருக்கும் இறங்கிய இடத்தில் வந்திறங்கிய படகின் எண்ணும் ஒரு இலக்கமும் எல்லைப் பாது காப்பு அதிகாரிகளினால் கொடுக்கப்படும். அந்த எண்ணே அவர்களுக்குரிய அடையாள எண் ஆகும்.

"410 .நாங்க கடலுக்குள்ள வரும் போதே சட்டத்தை மாற்றிட்டாங்க."

"நீங்க....? "

" 433 முதல் கேஸ் ரிஜக்ற் ஆகிற்று. திருப்பி போடவேணும்."

முதலைக்கு இன்னொரு தீனி கிடைத்து விட்டது என்று செல்வம் நினைத்துக் கொண்டான்.

ஒரு முறை கணேஷ் அங்கிளுடன் விஸ்கி எடுத்துக் கொண்டிருக்கும் போது சொன்னது ஞாபகம் வந்தது. கணேஷ் அங்கிள் படகில தான் வந்தவர். போன வருஷம்தான் சிற்றிசன் கிடைத்தது.

குடும்பத்தை எடுத்து விட்டார். பிள்ளைகள் உழைக்கிறார்கள். பென்சன் பணத்தில் அவர் வாழ்க்கை நிம்மதியாக நகர்கிறது. ஆனால் அவர் இப்போது கதைக்கும் கதைகளைப் பார்த்தால் சட்டபூர்வமாக அவுஸ்திரேலியாவிற்கு வந்த மாதிரி அவர் பேச்சு பெரிய பந்தாவாக இருக்கும்.

"நாங்களெல்லாம் வரக்குள்ள அகதிக் கேசெல்லாம் உடனே எடுத்து முடிவும் சொல்லி விடுவாங்க. இப்ப போலில்ல அப்ப. மூன்று மாசத்திற்கு ஒன்று அல்லது ஆறு மாசத்திற் கென்று ஒன்று என்றுதான் போட் வரும். இப்ப என்னடா எண்டால் ஒரு கிழமையிலேயே 2 ,3 என்று வந்து புளுத்து போய்க் கிடக்கு. பாதிக்கப் பட்டவங்க வந்தா பரவாயில்ல. சும்மா கண்டவன் நிண்டவன் எல்லாம் ஏறி வந்தா இப்படித்தான்..."

கணேஸ் அங்கிளின் கதை செல்வத்திற்கு எரிச்சலை ஊட்டியது. வந்த வழியை மறந்து இப்படிப் பேசுகிறார். வசதிகள் வரும்போது மனிதமனநிலை அதன் போக்குகள் எப்படி மாறுகின்றன என்பதற்குகணேஷ் அங்கிள் ஒரு உதாரணம்.

"அப்படிச் சொல்லாதீங்க அங்கிள். வந்தவங்க எல்லோருமே ஒரு வகையில பாதிக்கப்பட்டவங்கதான். இல்லாட்டி உயிரைப் பணயம் வைத்து சாப்பாடு தண்ணியில்லாம ஏன் சேவ்ற்றி ஜக்கற்றும் இல்லாம எப்படி வருவாங்க..? இதில ஒரிரண்டு பேர் நீங்க சொல்றமாதிரி இருந்தாலும் பெரும்பாலானவை இதே கேஸ்தான்."

கணேஷ் அங்கிளுக்கு செல்வத்தின் நியாயம் புரிந்ததோ இல்லையோ ஒன்றை மட்டும் தெளிவாகச் சொன்னார்.

" செல்வம் நீங்க எல்லோரும் பரமேஸ்வரன் லோயரைப் புளுகுகிறீங்க. ஒத்துக் கொள்றன்.

பரமேஸ்வரன் லோயர் அந்த நாளில ஒரு கேச எடுத்திற்றாரெண்டா அது எப்படியும் வெல்லும். அப்படிப் பட்ட திறமைசாலி. ஆனா வர வர பணத்தில ஆசை வந்தபடியா சில சுத்துமாத்து வேலைகளைச் செய்ய ஆரம்பிச்சிற்றார் என்பதே உண்மை.

"அப்பிடி என்றால்.." செல்வம் கேட்ட கேள்வியை இடைமறித்தார் கணேஷ் அங்கிள்.

"ஒரு கேசை எடுத்து உடனே வென்று கொடுத்தால் அவர் ஒரு கிளைன்ற்றை இழந்து விடுவார். அவரிடம் இருந்து பிறகு பணத்தையும் புடுங்க முடியாது. ஆனா ஒரு கிளைன்றை இரண்டு மூன்று தவணைக்கு இழுக்க விட்டு பிறகு கேசை வென்று கொடுக்கும் போது போது அவருக்கு காசு கூட வருகுது..அதே நேரம் வென்றவன் நம்பிக்கையில இன்னும் சில பேரக் கொண்டு வந்து இவரிட்டச் சேர்ப்பான். இது ஒரு ட்ரக்ஸ்ரிக் அப்படித்தான் அவரின் வியாபாரம் ஓகோ என்று இப்ப ஓடிக் கொண்டிருக்கு. அவன் ஒரு முதலை மாதிரி. எவ்வளவு வயிறு புடைக்க தீனி கொடுத்தாலும் தீராது."

செல்வத்திற்கு விளங்கவில்லை. ஆனால் பரமேஸ்வரன் லோயரை முதலை என்று சொன்னதும் அவரின் முதலை முகம் மீண்டும் நினைவில் வந்து மீண்டது.

"ஏன் அங்கிள் அப்படிச் சொல்றீங்க.. அப்படித் தெரியல்லையே.?."

" என்ன நான் முதலை என்றதா...?" கொஞ்சம் நிறுத்தி கணேஷ் அங்கிள் தொடர்ந்தார்

" ....இஞ்ச பார் செல்வம் அவன் நல்லா ஸ்மார்ட்டாக கேம விளையாடுவான். அது உங்களுக்கு விளங்காது

ஒன்று மட்டும் உண்மை .உங்களை அவரும் விடமாட்டார். நீங்களும் அவர விடமாட்டீங்க. ஏனென்றால் உங்களைத் தக்க வைத்துக் கொண்டால் அவருக்கு காசு. அதனால எப்படியும் கேசை உடனே முடித்துக் கொடுக்காமல் இழுத்தடிப்பார். அதே சமயம் சட்டத்தின் ஓட்டைகளைப் பாவித்து நீங்கள் தொடர்ந்து இங்க இருக்கிற மாதிரி எதையாவது சுத்து மாத்து செய்து வைப்பார். அது உங்களுக்கு வேணும். இல்லாட்டி பிடிச்சு அனுப்பி விடுவானுகள் என்ற பயம் உங்களுக்கு. நீங்கள் அவருக்கு ஏரிஎம் மெசினைப் போல அவன் அமத்த அமத்த காசு வந்து கொண்டே இருக்கும். நீங்களும் தொடர்ந்து இங்க இருக்க வேண்டும் என்பதற்காக அவரையும் விடமாட்டீங்கள். இதுதான் யதார்த்தம்."

செல்வம் வாத்துப் போல தலையாட்டினாலும் விஸ்கி அடித்த போதையில் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கணேஸ் அங்கிளுக்கும் நல்ல வெறி.

அந்த அம்மாவும் மகளும் உள்ளே போனார்கள். செல்வத்திற்கு பாத்ரூம் போக வேண்டும் போல் இருந்தது. பாத்ரூம் லோயரின் ஒவ்வீசுக்குள்ளதான் இருந்தது. கொஞ்ச நாளாக இந்த பாத்ரூம் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. டொக்டரிட்ட போன போது இரத்தம் பிரசர் செக் பண்ண வேண்டும் . சிலவேளை சுகராக இருக்கலாம் என்றார். அதன் பிறகு நேரம் கிடைக்கவில்லை. கேஸ் தோத்த பிறகு மெடிக்கல் கார்ட்டையும் கேன்சல் பண்ணி விட்டாங்கள். இப்ப போறதென்றால் டொக்டருக்கு 90 டொலர் காசு வேற கட்ட வேணும். வேலை முடியவே இரவு 7 மணியாகி விடும். வந்தால் களைப்புடன் தூக்கம். விடிய வேலை. ரத்தம் செக் பண்ணப் போக வேண்டும் போக வேண்டும் என்று தள்ளியே போகிறது. இந்த 10 வருஷத்திற்கு மேலாக தனியாக சமைத்து சாப்பிட்டே அலுத்தே போய்விட்டது. ஊரில் இருந்த போது குசினிப் பக்கமே எட்டிப் பார்த்திருக்க மாட்டான். பத்மாவும் நல்லா சமைப்பாள். அந்த நாக்கு இப்போது செத்துப் போய் விடடது." சும்மா தெங்கடி தேவைக்கென்று "எதையாவது பசிக்கு ஆடு குழை தின்றமாதிரியே சாப்பிட வேண்டி இருக்கு.

"செல்வம் உள்ள வாங்க " குரல் போலவே அழகான முகம் அந்த மலேசிய பெண்ணுக்கு. அண்மையில்தான் பரமேஸ்வரன. லோயரிடம் அசிஸ்டென்டாக வந்தவள். செல்வம் வந்ததிற்கிடையில் 4 பேராவது அசிஸ்டென்ட் வேலையில் இருந்து மாறி இருப்பார்கள்.

"வா செல்வம் " பரமேஸ்வரன் குரல் கனிவாக ஒலித்தது. அத்தனை நெருக்கம் வராதா என்ன..? இந்த ஐந்து வருஷத்திற்கு மேலான பழக்கம் அது. ரெகுலர் கஸ்டமராகித்தானே விட்டான் செல்வம்.

ஒரு சில பைல்களைத் தூக்கிப் போட்டார் பரமேஸ்வரன் லோயர்.

" நாம் போட்ட கேசை மாத்தி வேற செக்சனில போட வேணும். நம்ம கேஸ் போட்ட போது இருந்த அந்த செக்சன மாத்திற்றாங்க ஒரு பரிஸ்டரைப் பிடித்துத்தான் கேசைப் போடவேண்டும்."

ராசனிட்ட விட்ட ரீல் தான் தனக்கும் ஓடுகிறது என்ற சந்தேகம் செல்வத்தின் மூளைக்குள் ஓடியது.

ஏதோ ஒரு இலக்கத்தைச் சொல்லி இந்த செக்சனில போட்டாத்தான் தொடர்ந்து இங்கேயே இருக்கிற மாதிரி கேசை இழுத்தடிக்கலாம். பரிஸ்டரப் பிடிச்சே கேஸ் போட வேண்டும் என்பதால் காசு கொஞ்சம் செலவாகும் என்று லோயர் அடுக்கிக் கொண்டே போனார்.

இடையில் கொஞ்ச நேரம் நிறுத்தி பரமேஸ்வரன் லோயர் தொடர்ந்தார்.

"இஞ்ச பார் செல்வம். உன்னத் தெண்டிக்கல்ல. விரும்பினா போடு. இதப் போடுவதால கேஸ் முடியும் வரை நீ லீகலா இஞ்ச தொடர்ந்து இருக்கலாம். அதற்கேற்ற மாதிரி கேசை இழுத்திற்று போகலாம். உன்ர நன்மைக்காகத்தான் சொல்றன். நீயும் நல்லா பழகிற்றாய்"

தன் தலையில் நன்றாக அவர் ஐஸ் வைக்கிறார் என்று செல்வத்திற்றுப் புரிந்தது.

கணேஸ் அங்கிள் நினைவில் வந்து போனார்.

"ஐயா பாத்ரூம் போயிற்று வாறன்"

லோயர் செல்வத்தை நிமிர்ந்து பார்த்தார். அந்த பார்வை செல்வத்திற்கு மூளை ஏதும் பிசகி விட்டதோ என்கிற மாதிரி இருந்தது.

அடக்கி வைத்திருந்த மூத்திரம் போன பிறகே செல்வம் ரிலாக்ஸ் ஆகினான். "பேரா, எதை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கக் கூடாது " என்று அடிக்கடி பாட்டி சொல்வாள்.

பாத்ரூம் போன தெம்பில் வந்தமர்ந்த செல்வத்தைப் பார்த்து லோயர் தொடர்ந்தார்...

"செல்வம் பிடிக்கிற பரிஸ்டர் அவுஸ்திரேலியராக இருக்க வேண்டும். என்ன பேசாம இருக்கிறாய்..?"

"இல்ல ஐயா. நீங்க சொன்னா சரிதான்."

"அப்ப நான் பைல ரெடி பண்ணிற்று உனக்கு கோல் பண்ணுறன். காசை ரெடியாக்கி வை.."

"எவ்வளவு செலவாகும்?"

"மற்றாக்கள் எண்டா 3000 டொலர் எடுக்கிறவன். எனக்கு நல்ல பழக்கம் என்றதால 2500 டொலர் கொடுக்க வேண்டி வரும். முந்தி ஒரு 1500 கொடுக்க வேண்டும்."

தான் நினைத்து வந்ததை விட லோயர் மிக அதிகமாகத்தான் கேட்கிறார் என்பதை நினைக்க செல்வத்திற்கு தலை சுற்றியது.

நேற்றுப் பத்மாவோடு போனில் கதைக்கும் போது பத்மா சொன்னாள். அவுஸ்திரேலியாவில் இருந்து உங்களை அனுப்பிற்றாங்களாம் என்று கேள்விப்பட்டவங்களாம்...அவர் இருக்கிறாரா என்று கொச்சைத் தமிழில் இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்து விசாரித்ததாக சொன்னாள். வரவில்லை என்று சொல்லி அவர்களை நம்ப வைப்பதில் தனக்கு போதுமென்றாகி விட்டது என்று சொன்னாள்.

"உன்ர சிற்றுவேசனில வேற வழி இல்ல செல்வம்."

"காச ரெடி பண்ணு...ஓகேயா... வேறென்ன.."

அவருக்கேற்ற குறி காசு. அதை எவ்வளவு என்று சொல்லி அதை ஒப்புவித்து விட்டார். இனி அடுத்த வாடிக்கையாளர் தேவை.

பரமேஸ்வரன் லோயர் அவரின் முதலை தலையை நீட்டி எட்டிப் பார்த்தார் .ரிசப்சனில் யாரோ வந்திருந்தனர். இனி முதலைக்கு இன்னொரு தீனி கிடைத்து விட்டது போல. அடங்காத பசி.

செல்வம் எழும்பிக் கொண்டான்.

"அப்ப வாறன் ஐயா"

"நல்லது செல்வம். காச பிரட்டப் பார்..."

அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான். குளிர் குறைந்து வெயில் அடிக்கத் தொடங்கி இருந்தது.

காசு பிரட்ட வேண்டும். யோசனை தலையைக் குளப்பியது. இந்த மாதம் வீட்டு வாடகை. சரியாக அந்த திகதிக்கு வீட்டுக்காரன் வந்து விடுவான். போன் செலவு கரண்ற், காஸ் ,தண்ணி பில் என்று எக்கச்சக்க பில் ரூமில் கிடக்கு. அதற்குள் சாப்பாட்டுச்சாமான்களும் முடிஞ்சு போயிற்று. எல்லாம் ஒருமிக்க வந்து ....செல்வத்தின் தலையைச் சுற்றியது. யோசனையுடன்

சிக்னல் விழும் அந்த கடவைக்கு வந்து சேர்ந்தான்.

பத்மாவின் போன்.

" எங்கப்பா நிற்கிறீங்க?.."

"சொல்லுப்பா.."

"மகள் பெரிசாகிற்று. முதல்... பொம்பிளப்பிள்ள சிறப்பா கொஞ்சம் பெரிசா செய்ய வேண்டும்."

"சந்தோசம்.." செல்வத்தின் குரல் களை இழந்து போய் ஒலித்தது. தொடர்ந்து பேசிய செல்வம்

"நான் வெளியில நிற்கிறன் ரூமுக்கு வந்து கதைக்கிறன்."

செல்வம் வரும் போது பெண் பிள்ளைக்கு மூன்று வயது. இப்போ அவள் பெரியவள்.

மூளைக்குள் பல மின்னல்கள் பளிச்சிட்டன.. லோயரின் முதலை முகம் , வாடகைக் காசு வாங்க வரும் பஞ்சாமிகார வீட்டுக்காரன், பத்மா.. மகளின் அந்த ஏங்கிய விழிகள்...போன கிழமை கதைத்த போது எப்பப்பா வருவீங்க உங்களைப் பார்க்க வேண்டும் போல இருக்கப்பா என்று சொன்னபோது செல்வத்திற்கு அழுகையே வந்து விட்டது. வாழ்க்கையின் பெறுமதியான கணங்கள் எவ்வளவோ இழந்தாயிற்று. அனலாய் வெளிப்பட்டது பெரு மூச்சு.

பாதையைக் கடக்கப் போனவனின் தோளில் ஒரு கை. கூடவே காதைக் கிழிக்கும் ட்ராமின் பெரிய ஹோர்ன். அது தனக்காக அடிக்கப்பட்ட ஹோர்ன் என்று அறிய வெகு நேரம் சென்றது செல்வத்திற்கு.

தோளில் இருந்த கையை எடுத்தபடி கறுப்பான ஒரு ஆபிரிக்ககாரன் "take care man" என்று இவன் தோளில் தட்டியபடி இவனைக் கடந்து சென்றான்.

என்ன நடந்தது என்பதை ஜீரணிக்க முடியாமல் செல்வம் திக்கித்தபடி சிக்னலுக்காக அந்தப் பாதைக் கடவையில் காத்திருந்தான்.

ச ங்க இலக்கியப் பேராழியில் முத்துக்களை எடுத்தவர்கள் எத்தனையோ பேர். முத்துக்களை எடுக்கச் சென்று திரும்பிவந்து தம்பட்டம் அடித்தவர்கள் ஏராளம். சங்கம் கண்ட இந்த முத்துக்களின் பேரொளியைக் கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர் என்று தான் சொல்ல முடியும். கம்பன் வால்மீகியின் ராமாயணத்தை தமிழில் எழுதும்பொழுது பாற்கடலை பூனை நக்குவது போலத்தான் எனது முயற்சி என்று சொல்வார். அதுபோல சங்கக்கடலில் முத்துக்களை தேடி மூழ்கும் நான் கொண்டு வரும் இந்தப் பாடல்களின் சுவையறியும் முயற்சி கம்பனை ஒத்தது என்று சொல்வது கூட உயர்வு நவிற்சி என்பேன். சங்கப்பாடல்களில் எங்கிருந்து தொடங்குவது ,எப்படி பயணிப்பது என்றெல்லாம் தெரியாது. எவ்வாறு கூகிலாண்டவர் யூரியூப் தளத்தில் நாம் எதையாவது பார்க்கும்பொழுது ,நமக்கு பரிந்துரை செய்வது போல என் மனம்போன போக்கில் சங்கக் கடலில் நீந்தும்போது என் கைகளில் அகப்படுவதை உங்களுக்கு கொண்டு தருவது மட்டுமே என் பணி.

எழுத்தாளர் சாம்ராஜ் அண்ணா எழுதிய கொடைமடம் நாவல் முழுவதும் 1980-90 களில் வாழ்ந்து ,சரித்திரத்தில் மறைந்து மறக்கடிக்கப்பட்ட பல்வேறு தோழர்களின் கதை. உன்னத லட்சியத்திற்காக குடும்பத்தை, ஊரை, அடையாளத்தை விட்டு பிறருக்காகவே வாழ்ந்து மறைந்த பல இடதுசாரித் தோழர்களின் தியாகத்தை பதிவேற்றியிருக்கிறார். எனது சிறுவயதில் இப்படியான லட்சியவாதிகளைக் கண்டு வளர்ந்திருக்கிறேன். கொள்கைக்காக இன்னுயிரையும் துச்சமென மதித்து தியாகம் செய்பவர்கள் இந்த இடதுசாரித் தோழர்கள்.அவர்களின் தியாகம் பைத்தியக்காரத்தனம்



# அகம், புறம், சங்க(ம)ம்

## கொடை மடம் (பொங்கிப் பெருகும் அறம்)

போல் தோன்றலாம். அந்த நாவலை படித்து முடித்த பிறகு, அவரிடம் "நாவலுக்கும் பெயருக்கும் சம்பந்தம் இல்லையே. ஏன் இந்தத் தலைப்பை வைத்தீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "எளிய மனிதர்கள் உன்னத இலட்சியத்திற்காக தங்கள் உயிரையே பலி கொடுக்கத் துணிந்தவர்களை பற்றி சொல்வதற்கு இதை விட உயர்ந்த சொல்லை நாம் உருவாக்கி விட முடியாது. கவிஞர் இசை சங்கப்பாடல்களில் இருந்து இந்தச் சொல்லை எடுத்துக் கொடுத்தார்" என்று இந்தப் பாடலை எனக்கு அனுப்பி வைத்தார். அந்தத் தியாகம் தான் கொடைமடம். அதைத் தான் பரணர், பேகனை நோக்கி புறநானூற்று பாடலில் இவ்வாறு பாடுகின்றார்.

அறுகுளத் துகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறும்இடத் துதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே!

**இயற்றியவர்:** பரணர்.

**பாடல் தலைவன்:** வையாவிக் கோப்பெரும் பேகன்.

**திணை:** பாடாண். (பாடுதற்குரிய ஆண்மகனின்(வேந்தர்) சிறப்பியல்புகளைக் கூறுவதோடு அவனது வீரம், புகழ், குடிப்பெருமை, கொடை,கல்வியறிவு மற்றும் செல்வம் குறித்துப் புகழ்ந்து பாடுவது.)

**துறை:** இயன்மொழி (மன்னவனின் இயல்பை மொழிவது ,பாட்டுடைத் தலைவனின் இயல்புகளைக் கூறுவது இயன்மொழித் துறை )

அறுகுளத்து = வறண்ட குளத்தில்; உகுத்து = பொழிந்து; அகல் வயல் = அகன்ற வயல்வெளிகளில் ; வரையா மரபின் = வரைமுறையின்றிப் பெய்யும் மரபுடைய் மாரி போல = மழையைப் போல் கடாஅ யானை = மதங்கொண்ட யானை; கழற்கால் = வீரக் கழல் அணிந்த கால்களை உடைய; கொடை மடம் = வரைமுறையின்றிக் கொடுக்கும் அறியாமை; படைமடம் = போர்க்கள மரபுகளை மீறும் மடமை; படான் = செய்யமாட்டான் பிறர் படை = பகைவர்களின் படை; மயக்குறினே = தாக்குகையில்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

பேகனின் அவையில் அவனது கொடையின் தன்மை பற்றி சான்றோர்களிடையே உரையாடல் நிகழ்ந்தது. மயிலுக்கு போர்வை அளித்த பேகனின் செயலை சிலர் எள்ளி நகையாடினர். சிலர் பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததால் அவன் கொடைமடம் மிகுந்தவன் என்று கூறினர். அதைக் கேட்ட பரணர், " பேகன் கொடைமடம் உள்ளாவனாக இருந்தாலும் படைமடம் இல்லாதவன்" என்று பேகனைச் சிறப்பித்துக் கூறுவதாக இந்த புறநானூற்று பாடல் அமைந்துள்ளது.

எந்தக் கைமாறும் கருதாமல் எல்லோருக்கும் பெய்யும் கருமேகமானது தனது மழை நீரை தேவைப்படும் வறண்ட குளங்களிலும் பெய்கிறது பரந்த வயல் வெளிகளிலும் பெய்கிறது. தண்ணீர் தேவைப்படாத செழிப்பான நிலத்திலும் பெய்கிறது! தேவைப்படுவோர்,தேவையில்லாதோர் என்று பாரபட்சம் பாராது எல்லோருக்கும் தனது மழைநீரைத் தயங்காமல் வழங்குகிறது.அந்த மழைபோன்று தன்னிடம் யாசகம் வேண்டி வருபவர்கள் ஏழையா, வறுமையில் வாடுபவரா இல்லை செல்வந்தரோ என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் உதவி வேண்டி வரும் அனைவர்க்கும் வாரி வழங்கும் கொடைமடம் படைத்தவன் தான் அரசன் பேகன். ஆனால், மதங்கொண்ட யானைப் படைகளையும், வீரக் கழல் அணிந்த கால்களையும் உடைய பேகன், பகைவர்களின் படைகள் வந்து களத்தில் யுத்தம் செய்யும் போது ஒரு நாளும் போர் மரபு நெறிகளை மீறமாட்டான். அதுபோன்று தனது உயிரினும் மேலான அறநெறிக் கொள்கையினின்று என்றும் தவறமாட்டான் பேரறத்தான் பேகன். நடப்பது கொடிய யுத்தமென்றாலும் அதிலும் சில எழுதப்படாத விதிமுறைகளைக் கடைபிடிக்கவேண்டும் என்பது பண்டைய தமிழ் மரபு.. அவ்வாறு கடைபிடிக்காவிட்டால் படைமடமுடையவன் என்று இவ்வுலகம் இழிவாகப் பேசும் இழிநிலைக்கு ஆளாகும் நிலைமை நேரிடும். பரணர் பேகனை படைமடம் கொண்டவனல்லன் என்கிறார்.ஏனென்றால் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடியவர், வீரப்புண்பட்டு வாடுபவர், மூத்தோர், இளையோர் என தனக்கு சரிசமமாக போர்புரிய முடியாதவர்களிடம் பேகன் என்றுமே போர் புரிந்ததில்லை. ஆகையால்தான் பரணர் "பேகன் படைமடம் கொண்டவனல்லன்" என்று புகழ்ந்து பாடுகின்றார். இதுவே இந்தப் புறநானூற்றுப் பாடலின் பொருள்.

கொடை மடம் என்ற சொல்லை நாம் உற்று நோக்கும்போது நம் கண் முன்னே தியாகிகள் பல பேர் வந்து போகின்றனர். ஈழத்தில் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் பொழுது, அந்த அழுத்தம் தாங்க இயலாமல் தீக்குளித்து இறந்து போனானே தோழன் முத்துக்குமார், அவனது தியாகம் கொடைமடமல்லவா. பீகார் மாநிலத்தில் தனது நோய்வாய்ப்பட்ட மனைவிக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாமல் இறந்து போனதற்காக காரணம் சரியான போக்குவரத்து வசதி இல்லாமையே என்பதை அறிந்து தனி ஒருவனாக ஒரு சிறு உளி கொண்டு பெருமலையைக் குடைந்து பாதை ஏற்படுத்தினானே தசரத் மஞ்சி. தன்னலம் கருதாமல் பிறர் பைத்தியக்காரன் என்று அழைத்தபோதும், 22 வருடங்கள் தனி ஒருவனாக மலையைக் குடைந்து பாதையை ஏற்படுத்தியதும் கொடைமடம் தான்.

கொடைமடம் பற்றி பேசும்போது தமிழர்களின் உயர்ந்த பண்பான படைமடம் பற்றியும் பேசவேண்டும். சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள போர் பற்றிய பாடல்கள் மூலம் தமிழர்களின் யுத்த நெறிகளை அறிந்துகொள்ளலாம். வஞ்சகம், சூழ்ச்சி, யுத்த நெறிக்கு மாறாக எதிரிகளைக் கொன்றொழித்தல் என்பதெல்லாம் நாம் அந்தப் பாடல்களில் எங்கும் காண முடியாது. அறநெறியை பொது வாழ்வில் மட்டுமின்றி யுத்தத்திலும் சங்கத்தமிழர்கள் கடைப்பிடித்தனர். தனது உயிர் போகும்வரை யுத்த நெறியைக் கடைப்பிடித்து மாய்ந்த மாவீரர்கள் எத்துனை பேர். அவர்களின் தியாகமும் கொடைமடமே. தாய்நாட்டிற்காக தனது கடைசி மூச்சு வரை படைமடம் கெடாமல் களமாடி தனது உயிரை ஈந்த அந்தத் தியாகிகளின் கொடைமடத்தை நாம் என்றும் நினைவில் கொள்ளவேண்டும். ■

# புதுவருட ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததைவிட அதிகமான பண வரவு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். குழந்தை பாக்கியத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். வேலைச் சுமை அதிகமாகவே இருக்கும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சாதகமான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். முறையான உடற்பயிற்சி மற்றும் தியானம் செய்வதன் மூலம் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். கணவன் - மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். குடும்ப விஷயத்தில் மூன்றாவது நபரின் தலையீட்டைத் தவிர்ப்பது நன்மையைத் தரும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சிவபெருமானையும் நந்தீஸ்வரனையும் வழிபட வேண்டும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முயற்சிகள் வெற்றி அடையும் மாதமாகத் திகழப்போகிறது அதிகமான பண வரவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. உடல் நலனில் சிறு சிறு உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். கணவன்- மனைவிக்கு இடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு முன்பு வீட்டில் இருக்கும் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு எடுப்பது நன்மையைத் தரும். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மகாவிஷ்ணுவை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொறுமையாகச் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன்- மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மையைத் தரும். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மாரியம்மனை வழிபட வேண்டும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் திருப்திகரமான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்பட்டாலும் திடீர் செலவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒரு சிலர் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஒரு சிலருக்கு எதிர்பார்த்த சுப நிகழ்வுகள் வீட்டில் நடைபெறும். வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு குலதெய்வத்தை வழிபட வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதானமாக செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்ததைவிட அதிகளவு பணவரவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த ஒரு முடிவையும் அவசரப்பட்டு எடுக்காமல் நிறுத்தி நிதானமாக யோசித்து எடுப்பது நன்மையை தரும். திருமண முயற்சிகள் வெற்றி அடையும். வேலைச் சுமை குறைய ஆரம்பிக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு முருகப்பெருமானை வழிபட வேண்டும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. உடல் உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். பயணங்களை மேற்கொள்ளும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். வேலையில் நிதானமாகச் செயலாற்றுவது நன்மையைத் தரும். தொழில் ரீதியாக மேற்கொள்ளும் பயணங்கள் வெற்றியடையும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சனி பகவானை வழிபட வேண்டும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தைரியத்துடன் செயலாற்றும் மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்பட்டாலும் செலவுகளும் அதிகமாகவே இருக்கும். உடல் நலம் சீராக இருக்கும். கணவன்– மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். வேலை மற்றும் தொழிலில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் குறைய ஆரம்பிக்கும். உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் நன்மைகள் உண்டாக்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள நினைப்பவர்கள் இந்தக் காலத்தை பயன்படுத்திக் கொண்டால் வெற்றி பெறுவார்கள். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு பெருமாளை வழிபட வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கோபத்தை தவிர்க்க வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்ததை விட அதிகமான பண வரவு ஏற்படும். அதே சமயம் செலவுகளும் அதிகமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். குடும்பத்தாருடன் தேவையில்லாத வாக்குவாதத்தில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்வது நன்மையைத் தரும். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது கவனத்துடன் செயலாற்றுவது நன்மையைத் தரும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு விநாயகப் பெருமானை வழிபட வேண்டும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவைவிட அதிகளவு பண வரவு ஏற்படும். உடல் நலனில் சிறு சிறு உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஒரு சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் ஏற்பட வாய்ப்புகள் இருக்கிறது. வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு பிரத்தியங்கரா தேவியை வழிபட வேண்டும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப் போகிறது. எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். ஒரு சிலருக்கு விபரீத ராஜயோகம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையை தரும். பணரீதியான பரிவர்த்தனை செய்யும் பொழுது கவனமாகக் கையாள வேண்டும். வேலைச் சுமை அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு ஆஞ்சநேயரை வழிபட வேண்டும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வெற்றிகள் நிறைந்த மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். இருப்பினும் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன்- மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். சேமிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது நன்மையை தரும். வேலையைப் பொறுத்த வரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு வராகி அன்னையை வழிபட வேண்டும்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING

SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION

LIVE CHAT ON WEBSITE

TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)

WWW.TRANSCOCARGO.COM.AU